பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 61

ஞாயிற்றுக்கிழமை
26 ஜனவரி 2025

தை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**வயலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு**

» 15

புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

# இணைந்து செயற்பட வருக; தமிழரசுக்கு முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 26

அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் இணைந்து செயற்படுவதற்கு முன்வருமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

15

## இணைந்து செயற்பட சீ.வீ.கே. பச்சைக்கொடி

யாழ்ப்பாணம், ஜன. 26

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியுடன் புதிய அரசியலமைப்பு விவகாரம் தொடர்பில் இணைந்து செயற்படுவது சாத்தியமான விடயம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்

14

அதானி குழுமத்தின்

## காற்றாலைத் திட்டத்தை இரத்துச் செய்யவில்லை

கொழும்பு, ஜன. 26

அதானி குழுமத்தின் காற்றாலை மின்திட்டத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்

14

## மஹிந்தவின் மகன் யோஷித கைது!

கொழும்பு, ஜன. 26

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான யோஷித ராஜபக்ச குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

34 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான காணி ஒன்றைக் கொள்வனவு செய்த விவகாரத்தில்,

14

## தீர்வின்றித் தொடர்கிறது கொள்கலன் பிரச்சினை!

கொழும்பு, ஜன. 26

கொள்கலன் பிரச்சினை தீர்வின்றித் தொடர்ந்தும் நீடிப்பதாகக் கொள்கலன் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

15

## மயங்கி வீழ்ந்து ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 26

திடீரென மயங்கி வீழ்ந்த ஒருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். கட்டப்பிராய் கோப்பாயைச் சேர்ந்த பொ.ரவிச்சந்திரநேசன் (வயது -58) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்தவராவார்.

15

## ராஜபக்சக்களின் கரத்தில் குருதிக்கறை இல்லையாம்!

நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26

நாம்தவறிழைக்கவில்லை. எமது கரங்களில் இரத்தம் படியவில்லை. எனவே, எதற்கும் அஞ்சப்போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

யோஷித ராஜ

15




'நல்லாட்சிக் காலத்தில நாமல், திசைகாட்டிக்காலத்தில யோஷித. அதே படம், அதே காட்சிதான் கண்டியளோ'

## வடக்கில் பெண்கள் மத்தியில் போதைப் பாவனை அதிகரிப்பு!

ஆளுநர் அதிர்ச்சித் தகவல்

யாழ்., ஜனவரி 26

வடக்குமாகாணத்தில்பெண்கள் மத்தியில் போதைப் பாவனையும், உயிர்கொல்லிப் போதைப் பாவனையும் அதிகரித்துள்ளன என்று வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும்

15

# சஞ்சீவி

ஏன் உங்கள் பணத்தை சிக்க வைக்கிறீர்கள்?

9.26%
Yielding as at 31/12/2024

First Capital Money Market Fund இல் முதலீடு செய்யுங்கள்.
விரும்பிய நேரம் மீளப்பெற்றுக்கொள்ளுங்கள்.

தற்போதைய வருமான விகிதத்தில் மாறுபாடுகள் மற்றும் மாற்றங்கள் ஏற்படலாம். கடந்தகால செயல்திறன் எதிர்கால வருமானத்தின் குறிகாட்டி அல்ல. முதலீட்டாளர் பிரதான தகவல் ஆவணத்தை (KIID) வாசித்து புரிந்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். அவற்றுள் முதலீட்டாளர்கள் சம்மந்தப்பட்ட கட்டணங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 077 007 3684
173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
Open an account

First Capital
A Janashakthi Group Company

மக்கள் பலம் தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையற்ற ஆணிகளையே பிடுங்குகிறது அரசாங்கம்

கொழும்பு, ஜன. 26

**போக்குவரத்துச் சட்டத்துக்குப் பொருந்தாத உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்த பொலிஸார், வாகனப் புகை பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்று காற்று உமிழ்வு நிதியத்தின் இயக்குநர் தாசுன் கமகே சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 7.6 மில்லியன் வாகனங்கள் புகைப்பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.


அவற்றில் 1 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்கள் முதல் சுற்றில் தோல்வியடைந்துள்ளன.

கடந்த ஆண்டு, புகைப்பரிசோதனையில் தோல்வியடைந்ததால் 225 வாகனங்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பேருந்துகளில் சுமார் 50 வீதம் கடந்த ஆண்டு புகைப்பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன.

வாகனங்கள் வெளியிடும் புகையால் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. இதனால் பல்வேறு நோய்நொடிகள் மக்களுக்கு உருவாகும் அபாயம் ஏற்படும்.

இந்தநிலையில் அரசாங்கம் சாலை போக்குவரத்துச் சட்டத்துக்கும் பொருந்தாத உபகரணங்களை அகற்றுவதை விடுத்து வாகனப்புகைப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (ச-இ)



### கிளிநொச்சியில்

## புதையல் தோண்டிய 10 பேர் கைது

முல்லைத்தீவு, ஜன. 26

கிளிநொச்சி திருநகர்ப்பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்த குற்றச்சாட்டில் 10 பேர் நேற்றுக்காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைவாகப் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே அவர்கள் கைதாகினர்.

இதன்போது அவர்களிடமிருந்து புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-113,27)

## மக்கள் வரிப்பணத்தில் ஜனாதிபதியும் சுகபோகம்

*சாகர தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பயன்படுத்தும் உத்தியோகபூர்வ இல்லத்தின் மாத வாடகை சுமார் 500 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதாகப் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தங்கியுள்ள வீட்டின் மாதவாடகை தொடர்பில் செய்யப்பட்ட மதிப்பீட்டிலேயே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அரசாங்கம் பூனைகளுக்கும், நாய்களுக்கு உணவளிப்பதால் அரிசித் தட்டுப்பாடும் தேங்காய் சம்பல் தயாரிக்கப்படுவதால் தேங்காய்க்குத் தட்டுப்பாடும் ஏற்படுவதாக சிறுபிள்ளைத்தனமாகத் தெரிவிப்பதைவிடுத்து ஆக்கபூர்வமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## மஹிந்த ஆட்சிக்கால அதிகாரிகளுக்கு வலை

கொழும்பு, ஜன. 26

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்த சில அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் காலப்பகுதியில் இருந்த சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் சிலர், ராஜபக்சக்களின் அரசியல் மற்றும் வணிக நலன்களுக்காகச் செயற்பட்டுள்ளனர் எனக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-இ)

### தெற்காசியாவில்

## வலிமையான கடவுச்சீட்டு; இலங்கை 4ஆம் இடம்

கொழும்பு, ஜன. 26

தெற்காசியாவின் 4 ஆவது சக்திவாய்ந்த கடவுச்சீட்டாக இலங்கைக் கடவுச்சீட்டு பதிவாகியுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 100 ஆவது இடத்தில் இருந்த இலங்கைக் கடவுச்சீட்டு உலகளவில் 96 ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கைக் கடவுச்சீட்டு தொடர்ந்து முன்னேற்றத்தைக் காட்டுவதாக ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



# சரிகிறது பொருளாதாரம் மீன்களும் இறக்குமதி!

*கைத்தொழில் அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 26

எதிர்வரும் நாள்களில் மீன்களையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலைமை ஏற்படக்கூடும் எனக் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் உரிய தரத்தில் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. உரியதரத்தில் மீன் உற்பத்தி செய்வது குறித்த தெளிவின்மையே இதற்கான காரணமாகும்.

இதனால் இலங்கையில் மீன் உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த 70 ஆண்டுகளாகவே நாட்டின் உற்பத்திப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த யதார்த்தம் கசப்பானது என்றாலும் அதனை எதிர்கொள்ளநேரிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.01.2025 | சனிக்கிழமை | X | 3 8 8 3 0 0 | 0435 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 25.01.2025 | சனிக்கிழமை | 2701 | I | 11 20 34 42 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.01.2025 | சனிக்கிழமை | R | 41 49 54 66 | 4862 |

**SASIRI** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 25.01.2025 | சனிக்கிழமை | 0608 | 09 23 39 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 25.01.2025 | சனிக்கிழமை | கன்னி | 28 45 46 50 | 4413 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 25.01.2025 | சனிக்கிழமை | N | 06 | 05 20 24 36 | 1877 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 25.01.2025 | சனிக்கிழமை | C | 04 54 58 60 | 2527 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்மாதிரியில் கிழக்கு ஆளுநர்

மட்டக்களப்பு, ஜன. 26
கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் எரிபொருள் செலவை 16 இலட்சம் ரூபாவிலிருந்து 3 இலட்சம் ரூபாவாகக் குறைத்துள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்திலால் ரட்ணசேகர தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத் திணைக்களத் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அரச வளங்களைப் பாவிக்கும்போது வினைத்திறனுடனும் பொறுப்புக்கூறலுடனும் செயற்படுமாறு அவர் தெரிவித்துள்ளார் (ச-22,6)

## தங்கூசிவலை தடை மீனவர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26
வடமராட்சி கிழக்கில் பிரிவலை என அழைக்கப்படும் நூல்வலை கலந்த தங்கூசி வலையின் பயன்பாட்டுக்கு நீரியல் வளத்திணைக்களம் தடைவிதித்துள்ள நிலையில் அதற்கு மீனவர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மீனவர்கள் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் நீரியல் வளத்திணைக்கள அதிகாரியால் சமாசம் உட்பட வடமராட்சி கிழக்குக் கடற்றொழில் சங்கங்களுக்கு தடைபட்ட தொழில் தொடர்பில் அண்மையில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

அதில் பிரிவலை உட்பட பலவகை மீன்பிடித் தொழில்கள் உடன் நடைமுறைக்குவரும் வகையில் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோர் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. பெரிய கண் உடைய பிரிவலையைப் பயன்படுத்தியே வடமராட்சி கிழக்கு மீனவர்கள் நண்டை மாத்திரம் பிடித்து தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

குறித்த தொழிலையும் தடைசெய்தால் வாழ்வாதாரத்துக்கு நாம் கையேந்த வேண்டிய நிலை உருவாகும். எனவே இந்தத் தடைக்கு எதிராக நாம் வீதிக்கு இறங்கிப் போராடுவோம் - என்றனர். (ச-27)



## விவசாய நிலங்களில் முளைக்கும் கட்டடங்கள்

### அதிகாரிகள் மௌனம்

**வவுனியா, ஜன. 26**
**வவுனியா-மன்னார் பிரதான வீதியில் குருமன்காடு - பட்டானிச்சூர் இடைப்பட்ட வயல் நிலங்களில் மண்கள் கொட்டப்பட்டு அவற்றை மேட்டு நிலங்களாக மாற்றிக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது மௌனம் காக்கின்றனர் என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:-
கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பட்டானிச்சூர் புளியங்குளத்தின் கீழுள்ள வயல் நிலங்களிலேயே இவ்வாறு மண்கள் கொட்டப்பட்டு வேலிகள் போடப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்ற சமயத்தில் வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டு குறித்த செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


எனினும் தற்போது இந்தச் செயற்பாடு மீண்டும் இடம்பெற்று வருவதனால் விவசாயம் செய்வதற்கான நிலங்கள் பறிபோகின்றன. எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு குறித்த செயற்பாட்டை உடன் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-22,18)

### ஊர்காவற்றுறையில்

## 6 உணவகங்களுக்குத் தண்டம்விதிப்பு

ஊர்காவற்றுறைப் பகுதியில் சுகாதாரச்சீர்கேட்டுடன் இயங்கிய 6 உணவகங்களுக்கு நீதிமன்றால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வேலணை, அல்லப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பா. கிசோக்குமார் தலைமையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 6 உணவகங்கள் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து குறித்த உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது ஒரு உணவகத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும், மற்றொரு உணவகத்துக்கு 60 ஆயிரம் ரூபாவும், 4 உணவகங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ச-22)



## காங்கேசன் கடற்கரையில் இறந்து ஒதுங்கிய கடலாமை

யாழ்ப்பாணம், ஜன. 26
காங்கேசன்துறை கடற்கரையில் இறந்தநிலையில் அரியவகை கடலாமை ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கரையொதுங்கியுள்ளது. அதேவேளை பருத்தித்துறை கடற்கரையிலும் நேற்று சனிக்கிழமை கடலாமை இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது (ச-25,28)

## அரசியற்பழிவாங்கலில் ஈடுபடவில்லை அரசு!



கொழும்பு, ஜன. 26
அரசாங்கம் அரசியற்பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் கடந்த காலங்களில் கோப்புகளை மறைத்திருந்தனர். அவற்றை மீள விசாரணைக்கு உட்படுத்தி எடுப்பதற்கு சிறிதுகாலம் செல்லும். சில விடயங்களுக்காக பிணை கிடைத்தாலும் வழக்கு விசாரணை தொடரும். பொலிஸார் உரிய வகையில் செயற்படுவார்கள் என நாம் நம்புகின்றோம். பொலிஸாருக்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும். சிலர் கூறுவதுபோல் அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடவில்லை. நடைபெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பில்தான் விசாரணைகள் இடம்பெறுகின்றன.' என்றார். (ம-44)



15 ஆவது வருடமாக யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வு யாழ். முற்றவெளி மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் கண்காட்சியைப் பார்வையிடுவதில் உள்நாட்டுமக்கள் மாத்திரமன்றி வெளிநாட்டவர்களும், புலம்பெயர் தமிழ்மக்களும் அதிக ஆர்வம் செலுத்தியுள்ளனர். (ச-22,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்**
ச.சஸ்மிதன் 150 , க. அபிஷ்கா 149 , உ.கவிதாஞ்சன் 147 யோ. ஹரிசாந் 141 , லோ.யஸ்மினா 139

**கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்**
ச.மகரிசன் 150, சு.ரிஸ்மிதா 150, க.கனிஸ்ரன் 148, க.சஜீனா 142

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**
பி. சாம்சன் 151, செ. தம்சிகா 149, ற. ஜெனிஸ்ரன் 148, ம. மதுமிதா- 146,

**யா/அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி**
த. கஜினிகா 146, ச. பிருந்தா 140, யோ. ருசித்திரா 139

**சுழிபுரம் கிழக்கு அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலை**
சி.றசிகரன் 164, சு.அபிலாஷ் 133, யோ.ஜங்கரன் 116, கி.சிவராஜ் 125, ஜெ. சிவன்சுதன் 126, க.கருணவேல் 129, ஸ்ரீ.ரிஷிகேஸ் 83, சி.சிறிமதீசன் 102, மே.டிசான் 90, அ.அஸ்வின் 99, ச.கானவர்ஷசர்மா 79, ஜெ.கபிஷா 135, அ.பவித்திரா 104, ச.அபிநயா 103, க.விஷ்ணுகா 87, சி. டக்ஷன்யா 80

**உடுவில் மகளிர் கல்லூரி**
நி. மெல்வின் மெகன்ஷிகா 169, க. கபிலாஷ் 169, ந. கொஷில்கா 166, வி. நேறுஷன்165, சி. அக்ஷயா 164, க. அக்சிகா164, ச. கிஷாந்163, ஆ. அட்சரன்163, கி. லதாங்கி 162, மு. மிறுதலா 162, தி. திவிலோசன் 162, க.றுக்சியா 160, து. ஆதவ்159, சி. சகானா157, சி. யஸ்மி 157, மு. டெபினா 156, க. ஜகிஸ்னவி156, உ. மதுமை 155, சு. லதுசா 155, சி. அக்சனா 155, அ. சபரிஷ் 155, சு. டர்வின் 154, ச. கிறிஷிகேஷன் 154, அ.லதுஷிகன் 154, சு. சுயஸ்ரிகா 154, பு. துயானி 153, றீ. சாதுர்யன் 153, இ. தர்சிதன் 153, டி. அகியேஷர் 153, இ. யனோசன் 152, ம. நிவேர்சன் 151, பி. அபிராமி 150, றூ. தஸ்மிகா 150, பி. அபிணாஸ் 149, அ.கதிகேஷ் 148, மு. யதுஷிகன்147, செ. பவித்திரன்147, செ. மதுசாயினி 146, இ. மதுசிகன் 146, கே. கம்ஷாரா 145, க. கவிஷாலன்145, ஞா.கோபிஷா144, அ. துஷாரா 144, கோ. லக்ஸ்மிரா 144, ச.சாகித்தியா143, சி. டிவ்யாங்கனா 143, றொ. றுசாந் 142, ய. அபிசாய் 142, பி. அஸ்விதா 141, ச. பிறானுகா 141, நி. யசிந்தினி 141, ம. சமினா 141, யோ. ஷெரானிமில்ஸ் 141, பா. மெருஷன் 141, க. அஸ்வின் 141, கி. சலோனியா 140, கு. ஆரணன் 139, ஞா. கோபிஷாந் 139, சு. சந்தோஷ் 139, த. நிகலக்சிகா 139

**சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை**
த.டக் ஷிதா 170, பி. பிரதீசன் 167, ச. சஞ்சையன் 166, ர. ஹஷ்லிந் 165, ரி.ரோகிஷன் 162,
சி.காவியா 161, ம.டர்மிகா 159, க.மோகிசா 158, ம.சஷ்வீன் 155, வி.பவிஸ்ணவி 154, கோ.ஆருஜன் 153, க.யஸ்மிதா 152, க.தமிஜா 152, வி.கர்ஸிதா 151, ச.டனீசியா 151,
த.திவ்வியன் 151, மு.கம்சயன் 151, ஜ.அகல்யன் 151, செ. அபினா 150, செ.அக்சயா 150, சி.பரணியா 149, அ.அஸ்ளி 149, த.யர்ஸ்மிகா 148, ச. தனஷிகன்148, ம.ஜன்சிதா 147, அ.யஸ்மிதன் 147, க.ஜர்சவி 147, செ.பூங்குழல் 146, க.அபிஷயா 146, ஞா.நாககஜன் 145, க.ஹரிதன் 145, நி.சந்தோஸ் 145, பி.கவிநயா 144, ஜெ.கார்திகன் 144, பி.விகாஸ் 143, பே.மிதுசன் 143, ச.சர்ஜனா 142, ச. தஷ்மியா 142, க. சஞ்ஜேய் 142, சு.டனோஷன் 141, க.அஜிஷா 140, ப. நிருத்திகா 139

**யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி**
ஜ. கிருஷ்ணவி 172, கி. தேனுஷா 168 , உ. சன்சிகா 168,ம. கருனிகா 166, செ. லக்சிகன் 165, பு. கவிவர்சன் 162, ப. லக்சயன் 162, வி. சர்வகன் 160, சி. தக்சிகா 159, ப. ஆராதனி 157, அ. அமேலிசா 156, சஸ்மிகா 156, ச. கவிசனா 155, ற. திசானா 155, வ. வாசந்த் 154, ஜெ. டிலக்சன 153, க. றிட்திக் 151, வ. றேசோன். 150, து. தரணிசா 151, கே. ஆயனிகா 150, ம. கயனிலா 150, ற. பகிரதன் 148, அ. மதுசகன் 145, தி. நர்த்தாகி 144, அ. டான்சிகா 144, ம. சாருக்சன் குறுஸ் 143, சி. கீதாயினி 143, சா. கவிஸ்ரா 143, ச. விதுசன் 142, ட. தர்விசா 142, பி. கம்சிகன் 139, க. கரிஸ் 139, பி. அஜிந்த் 139 (ச-25, 41-9, 159-63 555)



போக்கட்டி பாடசாலை

## மாணவி ச.கபிசிகா வலயத்தில் முதலிடம்

கொடிகாமம், ஜன. 26
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவி ச.கபிசிகா 170 புள்ளிகளைப்பெற்று வலயமட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.
பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள கிராமப்புறப் பாடசாலையான போக்கட்டி அ.த.க. பாடசாலை முதல்முறையாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,159)

25ஆண்டுகளின் பின்

## கார்த்திகேய வித்தியாசாலை புலமைப்பரிசிலில் சாதனை!



யாழ்ப்பாணம், ஜன.26
யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை தெற்கில் அமைந்துள்ள யாழ். கார்த்திகேய வித்தியாசாலையில் கல்விபயிலும் மாணவி யசோதரன் கன்சிகா 2024ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப்பெற்று பெருமைசேர்த்துள்ளார்.
பொருளாதார ரீதியாக நலிவுற்ற குறித்த பாடசாலை 25 ஆண்டுகளின் பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனைபுரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-41-27)

## உடுவில் மகளிர் கல்லூரி வலிகாமத்தில் முதலிடம்!

யாழ்ப்பாணம், ஜன.26
புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் உடுவில் மகளிர் கல்லூரி வலிகாம வலயத்தில் முதல் நிலையை அடைந்துள்ளது.
பரீட்சைக்குத் தோற்றிய 160 மாணவர்களில் 61 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலும், 81 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேலும், 18 மாணவர்கள் 70புள்ளிகளுக்கு மேலும் பெற்று 100வீத சித்தியை அடைந்துள்ளனர். (ச-41-27)



## யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது சட்ட மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 26
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை, இந்தியாவின் புகழ்பூத்த சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து நடத்தும், 'முறை செய்' என்ற தலைப்பிலான சர்வதேச சட்ட மாநாடு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த மாநாடு இன்றும் இடம்பெறவுள்ளது.
முதல்நாள் நிகழ்வான நேற்று ஆளுகை நிலைமாற்றம் தொடர்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டியான் ஷாவும், இலத்திரனியல் நிலைமாற்றம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி சுனில் அபேரட்னவும் சிறப்புரைகளை ஆற்றினர். அத்துடன் மற்றுமொரு சிறப்பம்சமாக மக்களின் அரசியலமைப்பு , அதன் எதிர்காலம் என்னும் தலைப்பிலான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. (ச-25, 27)






தென்மராட்சி வலயத்தில்,

## இடைக்குறிச்சி வித்தியாலய மாணவன் இரண்டாமிடம்!

கொடிகாமம், ஜன. 26
கிராமப்புறப் பாடசாலையான இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய மாணவன் அ.அபிதரன் தரம்-5புலமைப்பரிசில்பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று தென்மராட்சி வலயமட்டத்தில் 2 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். (ச-25, 159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய ராசிபலன்

**மேடம்:** இன்று அனைத்து விஷயங்களிலும் பொறுமையாக இருப்பது அவசியம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மிதுனம்:** எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். தாய்மாமன் வழியில் சுபச்செய்தி வரும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவும் ஏற்படும்.

**விருச்சிகம்:** உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பயணத்தின்போது கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரைவதுடன் கடனும் வாங்க நேரிடும். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

# காகில்ஸ் '1990 சுவசெரிய அறக்கட்டளைக்காக' இரண்டு அம்புலன்ஸ்களைத் தத்தெடுத்துள்ளது

1990 சுவசெரிய அறக்கட்டளையின் 'ஒரு அம்புலன்ஸ் தத்தெடுப்பு' திட்டத்தினுடாக காகில்ஸ் (சிலோன்) பி.எல்.சி. நிறுவனம் இரண்டு அம்புலன்ஸ்களை தத்தெடுத்து அவசர சுகாதார சேவையை மக்கள் பெறுவதற்கு ஆதரவளித்துள்ளது.




முதலாவதாக மீள்புதுப்பிக்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி தற்போது யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு, அத்தியாவசிய அவசர மருத்துவ சேவைகளை அப்பகுதியில் வழங்கிவருகின்றது. மீள்புதுப்பிக்கப்பட்ட மற்றைய அம்புலன்ஸ் வண்டி அண்மையில், கிளிநொச்சிப் பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு. வட மாகாணத்தின் சுகாதார அணுகலை மேலும் மேம்படுத்த வழிசமைத்துள்ளது. 2016 இல் நிறுவப்பட்ட '1990 சுவசெரிய' நாடு முழுவதும் மருத்துவமனைக்கு முன்னதான அவசர சிகிச்சையை இலவசமாக வழங்கும் ஒரு தேசிய அம்புலன்ஸ் சேவை ஆகும். இந்த உன்னத நோக்கத்தை ஆதரிக்க முன்வருவதன் மூலம், நாட்டின் சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் அவசர மருத்துவ சேவைகளை இலங்கை மக்கள் அனைவரும் விரைவாகப் பெறுவதை உறுதிசெய்வதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குரிய தனது ஆதரவை காகில்ஸ் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. (ச-இ)

# மகாசிவராத்திரி கலந்துரையாடல்

மன்னார், ஜன.26

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் பக்தர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவுப்பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. (ச-41-56)

# பட்டிமன்றம்!

யாழ்ப்பாணம், ஜன. 26

துன்னாலை நவிட்டான்பதி காளிஅம்பாள் ஆலய சப்பறத் திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக சிறப்புப் பட்டிமன்றம் நாளை திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிரபல பேச்சாளர் சொல்வேந்தர் பொன். சுகந்தனின் தலைமையில் இந்தப் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. (ச-25)

★★★★★

யாழ்ப்பாணம், ஜன. 26

சுன்னாகம் - தாளையடி அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான மகாகும்பாபிஷேகக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

பட்டிமன்றம் 'இன்று தமிழர்களில் கலை இலக்கிய பண்பாடு வளர்கிறது- தளர்கிறது' என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது. பட்டிமன்ற நிகழ்வில் நடுவராகச் சைவப்புலவர் செ.த.குமரன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-22)

# சிவயோகசுவாமிகள் குருபீடம் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜன.26

சித்த சிவயோகசுவாமிகளுக்கு புதிதாக அமையப்பெற்ற 'சிவயோக சுவாமிகள் நற்சிந்தனை குருபீடம்' புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட புங்குடுதீவைச் சேர்ந்த கோ.தீபன் குருபீடத்தைத் திறந்துவைக்க அவரது தாயார் திருமதி கோ. கமலாதேவி நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்யவுள்ளார். இதன்போது 'சிவயோகசுவாமிகள் அருள்பிரவாகம்' கைநூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ச-25-41)






# டெங்கு விழிப்புணர்வு ஆவணப்படம் யாழ். இந்துக் கல்லூரியில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்.மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் அனுசரணையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒளிப்படக்கலைக் கழகத்தின் தயாரிப்பு மற்றும் ஒளிப்படமாக்கலில் உருவான டெங்கு விழிப்புணர்வு தொடர்பான ஆவணக் குறும்படம் கடந்த திங்கட்கிழமை யாழ். இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் வெளியிடப்பட்டது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் சமன் தர்மஸ்ரீ பத்திரன, யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரி ரம்யா சந்திரசேகரன், யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன், யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன், பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

– ஜான்மில்டன்–

## சத்தமின்றித் தொடரும் போர்!


வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நடத்தும் அழகக சங்கங்களால் தமது வாழ்வாதாரம் பறிக்கப்படுகின்றது என்று வடமாகாண ஆளுநரிடம் முறையிட்டிருக்கின்றனர் அழகக சங்கத்தினர். அழகக நிலையங்களை இராணுவத்தினர் நடத்தினால், தமது தொழில் வாய்ப்புக்கள் எவ்வாறு மேம்படும்? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அழகக உரிமையாளர்களின் ஆதங்கம், எந்தவொரு இரண்டாவது நிலைப்பாடும் இல்லாமல் ஏற்கப்பட வேண்டியது. அவர்களின் உளக்கொதிப்புக்கு 'பொருளாதார வரட்சி நிலைக்கு' வடக்கின் ஆளுநரும், அதிகாரிகளும் என்ன பதிலை வழங்கப்போகின்றனர்?

வடக்கில் இராணுவம் பாதுகாப்பை வழங்குகின்றதோ இல்லையோ, பொருளாதாரச்சிதைப்பை கனகச்சிதமாக மேற்கொண்டுவருகின்றது. இந்தக் குற்றச்சாட்டு இன்று நேற்றல்ல கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றது. போர் முடிவுக்கு வந்த பின்னர் -கடந்த 2010 ஆம் ஆண்டுமுதல் இராணுவத்தின் பொருளாதாரச்சிதைப்பு பலமடங்கு வேகம் பெற்றிருக்கின்றது. வலிகாமம் வடக்கில் உள்ள பலநூறு விவசாய நிலங்களின் அறுவடைகள் இராணுவத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன.வடக்கின் கடற்கரைப் பகுதியில் இயங்கும் இருபதுக்கும் மேற்பட்ட விடுதிகள் இராணுவத்தால் நடத்தப்படுபவை, இவ்வளவு ஏன், இன்று பெரும்பாலான இராணுவ முகாம்களுக்கு முன்பாகக் கடைகள் திறக்கப்பட்டு விற்பனை அமோகமாகியிருக்கின்றது. ஏன் இந்த நிலை? இராணுவத்தினரின் கடமைதான் என்ன?

போர் தின்றுதீர்த்த ஒரு பூமியில் அபிவிருத்திகளும், வேலைவாய்ப்புக்களும் உருவாக்கப்பட வேண்டும். விடுதிகள், ஆடம்பர விடுதிகள், வணிக வளாகங்கள் என்பன கட்டியெழுப்பப்படத்தான் வேண்டும். இவற்றில் இரண்டாவது கருத்துக்கு இடமேயில்லை. வடக்கிலும் அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன தான். ஆனால், அவற்றில் 50க்கும் மேற்பட்ட விழுக்காட்டில் இராணுவப் பின்புலம் உள்ளதெனில், எவ்வாறு போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படும்? உண்மையில் வடக்கில் இப்போதும் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இது சத்தமின்றி -ரத்தமின்றி செய்யப்படும் போர்.

வடக்கில் இராணுவக் குறைப்பு மேற்கொள்ளப்படவேண்டும் என்பது தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கை. இந்தக் கோரிக்கையின் தார்ப்பரியம் எவ்வளவு கனதியானது என்பதை அழகக உரிமையாளர்களின் முறைப்பாடு முரசறைந்திருக்கின்றது. இராணுவத்தை அளவுக்கு அதிகமாக நிலைநிறுத்தினால், அதற்கான செலவுக்கு என்ன செய்வது என்ற சிந்தனை அரசிடம் இருக்க வேண்டும். இராணுவத்துக்குச் செலவு செய்யக்கூடிய திராணியும் வல்லமையும் வாய்க்கவேண்டும். 'எல்லா மாடுகளும் ஓடுகின்றன என கந்தையரின் பேத்தைக் கன்றும் ஓடிய கதையாக' திட்டமிடல்களை மேற்கொண்டால், பாதிக்கப்படப் போவது என்னமோ அப்பாவிப் பொதுமக்கள்தான்.

அழகக சங்கத்தினர் முன்வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் வடக்கின் அதிகாரிகளும், ஆளுநரும் விரைந்து செயற்படவேண்டும். அழககங்களின் விடயத்தில் மட்டுமல்ல, பொதுமக்களின் பொருளாதாரத்துக்கு எதிரான அத்தனை சிதைப்புக்களும் கைவிடப்பட வேண்டும். தூய இலங்கைத் திட்டத்தின் பிரதான பணிகளில் இவையும் அடங்குகின்றன.




## பிரதேச செயலக மட்டத்தில் ஜனாதிபதி நிதியச்சேவை

### அடுத்த மாதம் ஆரம்பம்

**கொழும்பு, ஜன. 26**

**மக்களுக்குப் பயனுள்ள சேவையைப் பெறும் நோக்கில் பிரதேச செயலக மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்தின் சேவையை வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.**

அதன்படி, கொழும்பில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதி நிதிய அலுவலகத்தின் சேவைகளை நாடளாவிய ரீதியில் உள்ள 361 பிரதேச செயலக அலுவலகங்களிலும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஐந்து பிரதேச செயலகங்கள் தெரிவுசெய்யப்பட்டு இது தொடர்பில் முன்னோடித் திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய மக்கள் தமது பிரதேச செயலகத்தின் ஊடாக நோய்க்கு அமைவான கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலும், அது தொடர்பான ஆவணங்களைப் பிரதேச செயலகத்தினால் உடனடியாக பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## கட்டார்த் தூதுவராக பெண் நியமனம்

கொழும்பு, ஜன. 26

கட்டாருக்கான இலங்கைத் தூதுவராக ரோஷன் சித்தாரா கான் அசாத் அண்மையில் டோகாவில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கட்டார் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண்ணாவார்.

இவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் உட்பட பல்வேறு துறைகளில் உயர்பதவிகளை வகித்துள்ளார் என்பதுடன் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனுக்கான மேலதிக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சீரற்ற காலநிலையால் 92,471 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 27,751 குடும்பங்களைச் சேர்ந்த 92,471 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன், 320 வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## இராஜதந்திரப் பணிக்கு தகைமைசார் நியமனம்

கொழும்பு , ஜன. 26

வெளிநாட்டு இராஜதந்திர சேவையில் அரசியல் ரீதியான நியமனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. தகைமை அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று தொழிற்பயிற்சி பிரதியமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்துள்ளார்.

தகைமை அடிப்படையில் வெளிநாட்டுத் தூதுவர்களையும் இராஜதந்திரிகளையும் நியமனம் செய்யும்போது சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22.6)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 26

நாட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி பணமோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரித்துவருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் இந்தச் சம்பவங்களில் 27 வீதம் அதிகரித்துள்ளது என்று பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் காமினி செனரத் யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டில் குறித்த மோசடிகள் தொடர்பாக 132 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், உரிமம் பெற்ற 14 நிறுவனங்களின் உரிமையாளர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளை
திங்கட்கிழமை - தை - 14
27.01.2025
சுபநேரம் : 12.36 - 02.06
ராகுகாலம் : 08.06 - 09.36


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கோண்டாவில் சமுர்த்தி வங்கியில் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சமுர்த்தி வங்கி முகாமையாளரும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (ச)




# தடிவெட்டியவர் கைதானார்

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு, தேராவில் ஒதுக்கக்காட்டில் தடிகளை வெட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் புதுக்குடியிருப்பு வனவளத் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு வனவளத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தடிகள் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட நபரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த வனவளத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 26

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் விழாவும், பரிசளிப்பு விழாவும் மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, சிறப்பு விருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் உப தேர்வு செயலாளர் சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-25)

## இலங்கையில் முதல்முறையாக

# யாழ்.சிறைச்சாலையில் கணினிக் கற்கைமையம்

யாழ்ப்பாணம், ஜன. 26

சிறைக்கைதிகளின் நலங்களுக்காகவும் அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும்முகமாகவும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் கணினிப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்யசகர் சீனிவாசன் இந்திர குமார தலைமையில் இடம்பெற்றது.

நீண்டகாலமாக தண்டனை பெற்ற கைதிகள் இந்தக் கற்கை மையத்தில் கற்க முடியும் என்றும் இலங்கையில் முதல்முறையாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலேயே இவ்வாறு கணினிப் பயிற்சி மையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் தெரிவித்துள்ளார். (ச-23)



# 'பசுந்தளிர்' இதழ் ஆக்கங்கள் கோரல்

பளை, ஜன. 26

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் கலாசாரப்பேரவையால், வெளியிடப்படுகின்ற 'பசுந்தளிர்' இதழ்10 நூலுக்காக எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களின் கல்வி, கலை, கலாசாரம், வாழ்வியல், ஆன்மீகம் போன்ற விடயங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான கவிதைகள் , கட்டுரைகள், தனித்துவமான பாரம்பரியக் கூத்துக்கள், நாட்டார் வழக்கியல் போன்ற எழுத்தாக்கங்களைப் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பூர்விகமாக வசிப்பவர்கள் மற்றும் தொழில் நிமித்தம் இங்கே கடமை புரிபவர்களிடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன.

ஆக்கங்களை எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் பிரதேச செயலாளர் , பிரதேசசெயலகம் பச்சிலைப்பள்ளி எனும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கலாம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம். அதேவேளை dsofficepalai@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் அனுப்பலாம் எனப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


UNITED TRACTORS
யுனைடட் டிரக்டர்ஸ், தேசத்தின் முன்னனி பொறியியல் தீர்வுகள் வழங்குனர்
வெல்டிங் தீர்வுகள்
Air, Fuel மற்றும் oil வடிகட்டல் தீர்வுகள்
சூரிய மின்கலத் தீர்வுகள்
Visit us
PEOPLE'S LEASING
பீப்பல்ஸ் லீசிங்குடன் இணைந்து நெகிழ்வான நிதியளிப்பு வசதிகள்
SINCE 1947
75 YEARS
75 ஆண்டுகளுக்கும் மேலான பொறியியல் நிபுணத்துவம் மற்றும் நம்பகத்தன்மை
மேலதிக விபரங்களுக்கு
077 079 9609 (Prashath)
United Tractor & Equipment (Pvt) Ltd
683, Negombo Rd, Mabole, Wattala
UTE ~ The Journey Continues... Long After the Sale


AMANA
TAKAFUL INSURANCE
LIFE
ஒவ்வொரு இலங்கையரையும் ஒன்றென கருதும்
தங்கத்தில் முதலீடு
உங்களது பிள்ளை தொடர்பான உங்களது கனவு என்றைக்கும் கலையாது.
உங்கள் பிள்ளையின் எதிர்காலம் தொடர்பில் நீங்கள் கண்ட கனவை ஒரு நாளும் கலைந்துவிடாமல் காப்பதற்கும் அந்த கனவுகளை நனவாக்கிடவும் உங்களுக்காக வடிவமைக்கப்பட்ட தங்கமான பெறுமதி வாய்ந்த முதலீடு...
011 750 1000 | www.takaful.lk

26.01.2025 ஞாயிற்றுக்கிழமை

## இந்திய உப்பு நாளை நாட்டுக்குள்

கொழும்பு, ஜன.26

இறக்குமதி செய்யப்படவுள்ள உப்பின் முதலாம் தொகுதி நாளை நாட்டை வந்தடையும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவிந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உப்பு தட்டுப்பாட்டை தீர்ப்பதற்காக 30 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவை அனுமதியளித்திருந்தது. அதற்கமைய, முதற்கட்டமாக 4 ஆயிரத்து 50 மெற்றிக் தொன் உப்பு நாளைமறுதினம் நாட்டுக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இந்தியாவில் இருந்து குறித்த உப்புத் தொகை இறக்குமதி செய்யப் படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவிந்திர பெர்ணான்டோ மேலும் தெரிவித்துள்ளார். (ம-இ)

உணவுத் தவிர்ப்புப் போராட்ட எதிரொலி

## பல்கலைக்கழக மாணவர்களின் வகுப்புத்தடையை நீக்க முடிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்பது பேருக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடைகளை நீக்க வேண்டும் உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் மாணவர்கள் மீது விதிக்கப்பட்ட வகுப்புத் தடைகளை நீக்குவதென தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்தே மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர். (ம66)

19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09.04.1940

சிவன் அடியில் 25.01.2006

### அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்

(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும், ஸ்தாபகர்– சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.)

**திதி : அபரபக்க ஏகாதசி 25.01.2025**

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன் வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள் சேர்ந்து வாழ வேண்டுகிறோம்.


D.1/1, சென்றல் றோட்,
கொழும்பு - 12,
119, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(cs.57315) (N-1)

மரண அறிவித்தல்

மண்ணில் 10 . 01 . 1958



விண்ணில் 25 . 01 . 2025

வணக்கத்திற்குரிய

### ஜோயல் டேவகுமார் இரட்ணம்

(றெயின்போ திருச்சபையின் ஸ்தாபகரும், தலைமைப் போதகரும்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வணக்கத்துக்குரிய ஜோயல் டேவகுமார் இரட்ணம் நேற்று (25.01.2025) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாபவனம்,
டச்சுறோட், சண்டிலிப்பாய். (cs 57319) (N-1)

தகவல்:
றெயின்போ குடும்பம்

ஈழத்து நாடகத்துறையின் பிதாமகன்

## குழந்தை சண்முகலிங்கத்துக்கு சென்னையில் இரங்கல் கூட்டம்

சென்னை, ஜன. 26


அண்மையில் காலமான ஈழத்து நாடகத் துறையின் பிதாமகன் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மறைவை முன்னிட்டு சென்னையில் இன்று இரங்கல் கூட்டம் நடைபெறவுள்ளது.

சென்னை கூத்துப் பட்டறையில் பிரபல எழுத்தாளர் வெளி ரங்கராஜனின் ஒருங்கிணைப்பில் இந்த இரங்கல்கூட்டம் நடைபெறவுள்ளது. ஈழப் படைப்பாளிகள் பலரும் குறித்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம66)

மரண அறிவித்தல்

"நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக் கொண்டேன்"

தோற்றம் 10 . 01 . 1958



மறைவு 25 . 01 . 2025

### Rev. ஜோயல் டேவகுமார் இரட்ணம்

(தலைமைப் போதகர் றெயின்போ தேவாலயம்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட Rev. ஜோயல் டேவகுமார் இரட்ணம் அவர்கள் நேற்று (25.01.2025) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எட்வேட் செல்வரெட்ணம் - ஜோசபின் புஸ்பராணி ரெட்ணம் தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான போல் ஜெயராஜசிங்கம் சோமசுந்தரம் - புளோரா நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஈவ்லின் சாந்தினி இரட்ணம் அவர்களின் அன்புக் கணவரும், போல் டேவஷாந் ரெட்ணம், அபிகேயில் இவான்ஜலின் குமணன் (HNB ஊழியர்), தபித்தா கிறிஸ்டின் தேவகுமார் (ஆசிரியை யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷெறின் நிலாந்தி ரெட்ணம் (ஆசிரியை மன்/ ஆண்டாங்குளம் R.C.T.M.V), விவேகானந்தன் குமணன் (உப அதிபர் சென்ஜோன்ஸ் கல்லூரி), நீதிராஜா தேவகுமார் (வைத்தியர் LRH கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், லிவிஸ்ரெஷாந், அனாயா ஃபேய்த்தி, டிசான் கப்ரியேல், ஜேன் ஹடாஷா ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வகுமார், செல்வரெட்ணம் அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை பி.ப 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 711 0062

கலா பவனம்,
டச்சு றோட், சண்டிலிப்பாய். (CS/57326) J-1

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 02 . 05 . 1941



உதிர்வு 28 . 12 . 2024

கடந்த 28.12.2024 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் திலகவதி சோதிலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (27.01.2025) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும், முற்பகல் 11.00 மணியளவில் A9 வீதி கொடிகாமத்தில் அமைந்துள்ள "நட்சத்திர மஹால்" மண்டபத்தில் (இராமாவில் கோவிலுக்கு அருகாமையில்) நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆறுமுகம் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (cs.57317) (N-1)

குடும்பத்தினர்
Whatapp + 4479 5649 2242

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
01 • 04 • 1953



மறைவு
18 • 01 • 2023

## தர்மலிங்கம் சிவகுமாரன்

(இளைப்பாறிய உப அதிபர் - இராசு வாத்தியார்
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

திதி: அபரபட்ச துவாதசி

ஈராண்டு கடந்து போனாலும்
ஒரு யுகமே ஓடி முடிந்தாலும்
ஓயவில்லை கண்கள் மட்டும்
ஒவ்வொரு நாளும் நீர் சொரிந்து
ஆலமரம் சாய்ந்தாலும் அடிவிழுது
தழைத் தோங்கும் போல்
அப்பா நீ பிரிந்தாலும் உன்விழுதாய்
நாம் வளர்வோம்
உருவமாய் காத்த நீ அருவமாய்க் காப்பாய் என
ஆண்டவன் கழல் கூட ஈராண்டு
தவிர்த்து இருந்தோம்.
உந்தன் நிழல் தனில் எப்போதும் நாம்

குமரஸ்தான்,
செட்டிவளவு,
இணுவில் மேற்கு, இணுவில்.
(CS/57323) J-1
குடும்பத்தினர்.

# 32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இ.ச. பேரம்பலம் ESP

(வாரிவளவு காரைநகர்)

**திதி: துவாதசி**

பண்பின் சிகரமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பார் போற்ற வாழ்ந்தவரே !
யாழ் வணிகத் துறையில்
சாதனைகள் நிலைநாட்டி
ஊர்ப்பெருமை உலகறியச்செய்தவரே!
உங்களைப் பிரிந்து 32 ஆண்டுகள்
அகன்றபோதும். அழியாத ஓவியமாய்
எம் நெஞ்சங்களில் நிறைந்துள்ளீர்கள்
உங்கள் ஆத்மா சாந்திபெற
வாரிவளவு கற்பக விநாயகன் தாள்
பணிந்து நிற்கின்றோம்.

383, மணியோசை,
கோயில் வீதி,
நல்லூர்.
(cs.2358) (N-1)

கல்விக்காருண்யன்
லயன் கலாநிதி E.S.P. நாகரத்தினம் PMJF
குடும்பத்தினர்.

## விபத்தில் ஒருவர் பலி

மாத்தளையிலிருந்து மன்னார் நோக்கி வந்த லொறி மரத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 14ஆம் திகதி இந்த விபத்து ஏற்பட்டிருந்தது. லொறியில் சாரதிக்கு உதவியாகப் பயணித்தவே சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். மரண விசாரணை களை திடீர் மரணவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில், நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி
அம்பாள் ஆலய பரிபாலன
சபையின் செயலாளர்
திரு நடராஜா ஐங்கரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## கனகசபை நடராஜா

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 23.10.1939 மறைவு 25.01.2025

ஆலய பரிபாலன சபையினர்
நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம்



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234

(CS/2177) J-1

## மணமகன் தேவை

1996, இந்து, பூரட்டாதி, DOCTOR
பூர்வீகம் - பருத்தித்துறை, வதியுமிடம் - உடுப்பிட்டி
மணமகள் பதிவு இல: 11388.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29600D) J-1

## மணமகள் தேவை

1990, இந்து, விசாகம், DOCTOR
பூர்வீகம் - மிருசுவில், வதியுமிடம் - கொழும்பு
மணமகன் பதிவு இல: 11390.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29600E) J-1

## மணமகன் தேவை

1996, இந்து, பூராடம், TEACHER
பூர்வீகம் - உடுப்பிட்டி, வதியுமிடம் - திருநெல்வேலி
மணமகள் பதிவு இல: 11382.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29600F) J-1

## காணி விற்பனைக்கு

நீர்வேலி கரந்தன் சந்திக்கு
அருகாமையில் 13 பரப்பு தோட்டக்
காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவை இல்லை.

076 187 3199, 071 573 8866

(cs.44184) (N-1)

## அறைகள் வாடகைக்கு உண்டு

கொழும்பு தெகிவளையில் 2ம், 3ம்
மாடியில் தளபாடங்களுடன் வாகன
தரிப்பிடத்துடன் அறைகள்
வாடகைக்கு உள்ளது. படிக்கும்,
வேலைபார்க்கும் ஆண்களுக்கு
கொடுக்கப்படும்.

077 114 8537

(cs.57312) (N-1)

## மணமகள் தேவை

யாழ் RC மதம் 1982 ல் பிறந்த கொழும்பில்
வேலை செய்யும் மணமகனுக்கு படித்த
மணமகள் தேவை.(Hindu OK)

076 041 0334

## மணமகள்கள் தேவை

- யாழ். இந்து கௌரவ குடும்பம் (V) 1990 இல் பிறந்த பூராடம். உத்தியோகம்.
- 1994. 4 செவ்வாய் பரணி உத்தியோகம்
- 1988 பூரம் 12 செவ்வாய் உத்தியோகம்
- 1992 பூரம் Holland PR

ஆகிய மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை.

077 964 9245

(CR/29605) J-1

## மணமகள் தேவை

1991, இந்து, மூலம், MANAGER
பூர்வீகம் - புங்குடுதீவு, வதியுமிடம் - CANADA
மணமகன் பதிவு இல: 11347.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29600B) J-1

## மணமகள் தேவை

1995, இந்து, உத்தரம், CIVIL ENGINEER
பூர்வீகம் - பருத்தித்துறை, வதியுமிடம் - AUSTRALIA
மணமகன் பதிவு இல: 11331.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29600A) J-1

## மணமகன் தேவை

1996, இந்து, அனுசம், MANAGER
பூர்வீகம் - கரணவாய், வதியுமிடம் - நெல்லியடி
மணமகள் பதிவு இல: 11387.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29600C) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம்
43 வயது சொந்தமாக
தொழில்புரியும் மணமகனுக்கு
மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்ப்பில்லை
தொடர்புகளுக்கு:

077 905 8615

(cs.29704) (N-1)

## மணமகன் தேவை

யாழ். இந்து 1970 கன்னிராசி,
பட்டதாரி தனியார் நிறுவனத்தில்
தொழில் புரியும் மணமகளுக்கு படித்த
தொழில்புரியும் மணமகன் தேவை.

T.P.:Whatsapp: 077 783 2943

## வேலையாள் தேவை

பூநகரியில் தென்னந்தோட்டம் பராமரிப்பு
வேலையாள் தேவை.

- இருக்கும் இடவசதி உண்டு.
- குடும்பத்துடன் தங்கலாம்.

சுயவிபரங்களை SMS மூலம்
அறியத் தரவும்.

076 833 2842

(CS/57302) J-1

## காணி விற்பனைக்கு

KKS வீதி, மல்லாகத்தில்
வீட்டுடன் 2 1/2 பரப்புக்
காணி (3 BHK)
விற்பனைக்கு

076 744 8099

(cs.44182) (N-1)

## காணி விற்பனைக்கு


யாழ்ப்பாண நகரின் மையத்தில்
23 பேர்ச் காணி விற்பனைக்கு
உள்ளது. காணிக்கு முன்பாக
யாழ்ப்பாணம் போதனா
வைத்தியசாலையும், பின்னால்
Jetwing ஹோட்டலும்
அமைந்துள்ளன.
(தரகர் வேண்டாம்)
தொடர்புகளுக்கு:-

076 464 9028

(CR/44180) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தம்பிமுத்து சிவசுப்பிரமணியம்

நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (25.01.2025) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகராணி அவர்களின் அன்புக் கணவரும் கீதானந் (விபிர்சா கிறீம் கவுஸ்), மைதினி (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையம்-உடுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நவரட்ணராஜா, செல்வராணி, பரமேஸ்வரி, தங்கேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, யோகராஜா, தனலட்சுமி ஆகியோரின் சகோதரரும் லோகிதா, ஜெயசுதன் (அதிபர் அளவெட்டி வடக்கு அமெரிக்கமிசன் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் நிஜிந்தன், விபிர்ஷா, ஆதீஸ், ஆதர்ஸ், ஆயுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2025) ஞயிற்றுக்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**மகன்- 077 656 4948**
**மகள்- 074 378 7990**

(CS 23267) P-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 10 . 1939



மறைவு 25 . 01 . 2025

## கனகசபை நடராஜா

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நடராஜா அவர்கள் நேற்று (25.01.2025) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணி அவர்களின் பாசமிகு கணவரும், மஞ்சுளா (சுவிஸ்), சியாமளா (சுவிஸ்), ஐங்கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அமைச்சு, வ.மா) ஆகியோரது பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன் (சுவிஸ்), இன்பம் அருளையா (சுவிஸ்), தர்ஷினி (ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரது அன்பு மாமனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தில்லைநாதன், மயில்வாகனம் மற்றும் இராஜேஸ்வரி (கனடா) வைத்திலிங்கம் ஆகியோரது அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், பேரின்பநாயகம் ஆகியோரது மைத்துனரும், அஷ்வின், ஆகாஷ், ஆரணி, ஹரிணி ஆகியோரது பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**கலட்டிமுந்தல் லேன்**
**(கலைவாணி மில் லேன்)**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS/57329) J-1

**தகவல் :**
**ந.ஐங்கரன் (மகன்)**
**077 222 2024**

# மரண அறிவித்தல்



## உதயநாதன் விதுசன்

அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட உதயநாதன் விதுசன் கடந்த 22.01.2025 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் உதயநாதன் (முன்னாள் அதிபர் யா/கதிரிப்பாய் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்) - சரோஜினிதேவி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா-சிவபாக்கியம், நடராசா-மனோன்மணி ஆகியோரின் அன்புப் பேரனும், நிறைஞ்சினி அவர்களின் பாசமிகு கணவரும், தேனுஜா, லிஸ்வின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகராசா (நடுவில்)-யோகராணி தம்பதியரின் மருமகனும், லக்சன் (லண்டன்), லக்சிகா (லண்டன்), லபேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல் :
**குடும்பத்தினர்**
**076 968 9586**
**077 452 9665**

தோற்றம் 02.02.1993 மறைவு 22.01.2025

**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

(CR/441861) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும்பான்மை இறுமாப்புடன் செயற்படுகின்றது அநுர அரசு

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 26

நாடாளுமன்றத்தில் ஒருதலைப் பட்சமாக தேசிய மக்கள் சக்தி செயற்படுகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு விவகாரம் தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ. கே.சிவஞானத்துடன் இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மைப் பலத்தை வைத்துக் கொண்டு ஒருதலைப் பட்சமாகச் செயற்பட்டு வருகின்றது. பெரும்பான்மையை வைத்து எதனையும் சாதிக்கலாம் என்ற சிந்தனையை தேசிய மக்கள் சக்தி கொண்டிருக்கின்றது. சம்பிரதாயங்களை மீறியே தேசிய மக்கள் சக்தி செயற்பட்டு வருகின்றது. வடக்கு கிழக்கு மக்கள் மீது புதிய அரசியலமைப்பைத் திணிப்பதற்கே முயற்சிக்கின்றனர். எனவே நாம் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருக்கின்ற கட்சிகளிடையே இருக்கின்ற சில முரண்பாடுகளின் நிமித்தம் பொதுமக்கள் அந்த கட்சிகளுக்கு எதிராக கொண்டிருக்கும் மனப்பான்மையை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முனையலாம். எனவே அதற்கெல்லாம் இடங்கொடாது, மக்களை சரியான திசையை நோக்கி வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. அதிலிருந்து நாங்கள் தவறக்கூடாது - என்றார். (அ-ம-125)

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவு செய்ய முடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.innaipa.com

**சைவ வித்தியா விருத்திச் சங்கம் பதவி வெற்றிடம்**

எமது பராமரிப்பிலுள்ள சிறுவர் இல்லத்தில் பின்வரும் பணி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரித்த சுயவிபரக் கோவையினை 03.02.2025 இற்கு முன்னர் அலுவலகத்திற்கு தபாலில் அனுப்பிவைக்கவும்.

1. பெண்கள் இல்ல முகாமையாளர் - பெண்
   க.பொ.த (உ/த) சித்தி வயது - 30-55
2. முகாமைத்துவ உதவியாளர்
   க.பொ.த (உ/த) வணிகப் பிரிவு வயது 25-55
3. உபவிடுதிக் காப்பாளர் - ஆண் / பெண் வயது -25-55
   க.பொ.த (சா/த) கணித பாடம் சித்தி
4. சமையலாளர் - பெண்

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. 021 222 6525

திரு.த.தவரூபன்
செயலாளர்

(CR/44185) J-1

## இணைந்து...

துள்ளார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியமக்கள் முன்னணியினுடைய முயற்சி தொடர்பில் விரோதமாகவோ அல்லது எதிராகவோ மாறான கருத்தியலை தமிழரசுக் கட்சி கொண்டிருக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் கையாள்வதற்கு ஏழு பேர் கொண்ட அரசியல் குழுவை நாம் நியமித்துள்ளோம். விரைவில் நாங்கள் கூடிக் கலந்துரையாடல் நடத்தி ஒரு சாதகமான முடிவுக்குவருவோம் - என்றார். (அ-ம-125)

## மஹிந்தவின்...

இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் யோஷித ராஜபக்சவுக்கு எதிராகப் போதுமான ஆதாரங்கள் இருப்பதால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிக் கொள்வனவின் பிரதான சந்தேகநபர் டெய்சி பொரெஸ்ட் எனப்படும் யோஷித ராஜபக்சவின் பாட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## காற்றாலைத்...

தெரிவித்துள்ளார். அதானி குழுமத்தின் காற்றாலைத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் இரத்துச் செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே, அதானி நிறுவனத்தின் காற்றாலை ஒப்பந்தம் தொடர்பான தெளிவுபடுத்தல் இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கட்டண விகிதங்கள் மிக அதிகம் என்றே நாம் தெரியப்படுத்தியுள்ளோம். இந்தியாவுக்கான சமீபத்தைய விஜயத்தின் போது இது குறித்து ஜனாதிபதி எமது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். இலங்கையின் கரிசனைகளை ஜனாதிபதி வெளியிட்டார். இந்திய அதிகாரிகளும் இந்த விடயத்தில் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறியுள்ளனர். மற்றும்படி அதானி குழுமத்தின் திட்டங்கள் எவையும் ரத்துச் செய்யப்படவில்லை - என்றார்.

தமது திட்டங்கள் எதையும் இலங்கை ரத்துச் செய்யவில்லை என்ற தெளிவுபடுத்தலை நேற்று இரவு சிறப்பு அறிக்கையொன்றின் மூலம் அதானி குழுமம் தெளிவுபடுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## மரண அறிவித்தல்



மலர்வு 28.02.1967 — உதிர்வு 25.01.2025

### பொன்னுத்துரை ரவிச்சந்திரநேசன்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடி, பதிவுகாரர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ரவிச்சந்திரநேசன் யாழ்ப்பாணத்தில் நேற்று (25.01.2025) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கமாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், கெங்காதேவியின் அன்புக் கணவரும், நிதர்சன் (கனடா), நிவேதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துரைச்செல்வி (இலண்டன்), ஐங்கரநேசன் (யாழ்ப்பாணம்), ஆறுமுகநேசன் (இலண்டன்), பத்மினி அனுசூயை (கனடா), ஸ்ரீதத்தாத்திரேயநேசன் (யாழ்ப்பாணம்), திருக்கேதீச்சரநேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடி பதிவுகாரர் ஒழுங்கையில் உள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை வைக்கப்பட்டு, அதன்பின்னர் இறுதிக் கிரியைகளின் பொருட்டு கனடாவுக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ.ஐங்கரநேசன் - 077 5565 460
பொ.ஸ்ரீதத்தாத்திரேயநேசன் - 077 276 0493

(CS 2365) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 09 . 1930



மறைவு 25 . 01 . 2025

### திரு சீவரத்தினம் ஏனஸ்ட் விஜயராசசிங்கம்

(மல்லாகம் மகாவித்தியாலயம் இளைப்பாறிய கணித ஆசிரியர்)

வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும் நீதிமன்றவீதி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு சீவரத்தினம் ஏனஸ்ட் விஜயராசசிங்கம் அவர்கள் நேற்று (25.01.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம்-சுகிர்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா-ஞானமணி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜீவமணி அவர்களின் பாசமிகு கணவரும் ஜெயக்குமார் யோகாம்பிகை, செல்வகுமார் ஞானாம்பிகை, ரவீந்திரன் சாந்தி ஆகியோரின் சிறிய தந்தையும் கைலயங்குமரன், ஜெயகணேசன், தரணிதரன், மாதங்கி, ஆரணி, ஐங்கரன் ஆகியோரின் பேரனும் அருணன், செந்தூரி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செல்வகுமார் ஞானாம்பிகை
(பெறாமகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

இசைவிழாவும் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:- வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் மறுவாழ்வு நிலையம் அமைப்பது தொடர் பில் அதற்குப் பொறுப்பானவர்கள் என்னுடன் அண்மையில் கலந்துரையாடி னார்கள். இதன்போது, தமக்கு இரண்டு இடங்கள் தேவை என்று அவர்கள் என் னிடம் கூறினார்கள். 'ஏன் இரண்டு இடங் கள் தேவை?' என்று அவர்களிடம் கேட் டேன். ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் இரண்டு இடங்கள் வேண்டும் என்று அவர்களிடம் இருந்து பதில் வந்தது.

'தற்போது ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் அதிகளவில் போதைப்பொ ருள் மற்றும் உயிர்க்கொல்லிப் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள் ளனர்' என்றும் அவர்கள் கூறினார்கள். இந்தத் தகவல்கள் எனக்கு அதிர்ச்சி யைத் தந்தன.

எமது இளைய சமூகம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது? இது மிகவும் ஆபத்தான நிலைமை. இதனைத் தடுப் பதற்கு இளையோர்களின் சிந்தனைகளைச் சிதற விடாது நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளவகையில் செலவிடுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். எமது இளைய சமுதாயத்தினருக்கான சிறந்த எதிர் காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவ


### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றுடன் தங்கி இருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

- கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு.
- 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

077 774 3185

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) 1990 இல் பிறந்த செவ்வாய் தோசம் அற்ற கிரக பாவம் 32 உடைய மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஆசிரிய தொழில் புரிவோர் விரும்பத்தக்கது.

(CS/57325) J-1

தொடர்பு:- 077 133 0930

### வீடுகள் காணிகள் விற்பனைக்கு உண்டு

நல்லூர், திருநெல்வேலி, கோப்பாய், கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய்-இராசவீதி, நாவற்குழி ஆகிய இடங்களில் வீடுகள் காணிகள் விற்பனைக்கு உண்டு மற்றும் எம்மிடம் 60 பரப்பு நெற்காணியும் (கோயிலாக்கண்டி) விற்பனைக்கு உண்டு

077 193 3490
WhatsApp: 077 084 0453


## மரண அறிவித்தல்

மண்ணில் 02 . 05 . 1950



விண்ணில் 22 . 01 . 2025

### இராசமணி விநாயகமூர்த்தி

நீர்வேலி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி விநாயகமூர்த்தி கடந்த 22.01.2025 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும், விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், சசிகலா (பிரான்ஸ்), தீபகலா (கொலண்ட்), குசந்தி (யமுனா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவதாஸ் (பிரான்ஸ்) மற்றும் பத்மரஞ்சன் (கொலண்ட்), சிவசங்கர் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், அருண், அகில், அருந்தினா, திவ்வியா, தீனு, சயேஷ், லூப்னா ஆகியோரின் பேர்த்தியும், லியானாவின் பூட்டியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் புஸ்பராணி ஆகியோரின் சகோதரியும், பராசக்தியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசுவன் நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்
கணவர் - 077 8340 438
சசிகலா (மகள்) 33 6525 81432
குசந்தி (யமுனா - மகள்) 33 6514 35283
தீபகலா (மகள்) 0031 6304 05140

(Cs 57324) N-1

சியம் தேவை - என்றார். (அ-ம-66)

## வயலுக்கு...

கிளிநொச்சி - அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கண்ணகிபுரம் முக் கொம்பன் பகுதியில், நேற்றுமுன்தினம் வயல் வேலைக்காகச் சென்ற நபர் நேற் றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சின்னத்துரை காந்தரூபன் (வயது-38) என்ற குடும்பத்தலைவரே சடலமாக மீட் கப்பட்டவராவார். தோட்டவேலைக்குச் சென்ற கணவனைக் காணவில்லை என மனைவி தேடிச்சென்றபோதே அவர் சட லமாக மீட்கப்பட்டுள்ளார். உயிரிழந்த வரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக் காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (அ-ம-113)

## இணைந்து..

இது தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவ ஞானத்தை நேற்று நேரில் சந்தித்து கடி தம் ஒன்றைக் கையளித்துள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தி லும் அதற்குப் பின்னரும் தமிழருடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர் பாக, அரசாங்கத்திடம் வினவுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அரசாங்கத் தின் பொறுப்புவாய்ந்த பிரதிநிதிகளாலும், ஜனாதிபதியாலும் தமிழருடைய இனப்பி ரச்சினை விடயமானது, புதிய அரசியல மைப்பினூடாவே கையாளப்படும் என்ற கருத்தை உத்தியோகபூர்வமாக பதிவு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்தவகையில் தமிழ்மக்கள் கடந்த தேர்தலில் மூன்று தமிழ்க்கட்சிகளுக்கும் வழங்கிய ஏகோபித்த ஆணையின் அடிப்படையில் தமிழ்த்தேசத்தின் அங்கீ காரம், தமிழ்த்தேசத்தின் சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்த்தேசத்தின் தனித் துவமான இறைமையின் அடிப்படை யில், இணைந்த வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்ற அடிப்படையில் சமஷ்டித் தீர்வை வலியுறுத்திய புதிய அரசியல மைப்புக்கானபொதுயோசனையொன்றை முன்வைப்பதற்கும், அரசாங்கம் உத்தே சித்துள்ள 'ஏக்கிராஜ்ய அரசியல மைப்பை' தமிழ்த்தரப்பாக ஒன்றி ணைந்து நாடாளுமன்றத்தில் நிராகரிப்பதற்குமான முயற்சியில் தங்க ளுடைய கட்சியின் ஒத்துழைப்பும் மிக அவசியமானதாகும். நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையு டன் ஒரு தலைப்பட்சமாகத் தீர்மானங் களை நிறைவேற்றக் கூடியதான பலத் தில் அரசாங்கம் உள்ள நிலையில், அர சியற்தீர்வு விடயத்தில் நாடாளுமன்றில் உள்ள தமிழ்க்கட்சிகளிடையே இணக் கப்பாடு ஏற்படவில்லையாயின், 19 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையுடன் தொடர்புடைய அறு திப்பெரும்பான்மை நிலைப்பாட்டை தமிழ் மக்கள் சார்பாக வெளிப்படுத்தமுடி யாத நிலைக்குத் தள்ளப்படுவோம் - என் றுள்ளது. (அ-ம-66-26-125-27)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் புகையிரத நிலையத்திற்கு மிக அண்மையில் 1 3/4 பரப்பு காணி உடனடி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
076 799 1129


## மயங்கி...

கனடாவில் ஆராய்ச்சி பீட மாணவனாக உள்ள இவர் அண்மையில் இலங் கைக்கு வந்திருந்தார். இந்த நிலையில் பேராசிரியர் ஒருவருடன் நேற்று அதி காலை சூமில் உரையாடிக்கொண்டிருந் தபோது திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அந்தப் பேராசிரியர் அவரின் உறவினர் களுக்குத் தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து, உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், அவர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்படுவதற்கு முன்னதா கவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்து வர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இறப்பு விசாரணைகளையாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசா ரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற் கொண்டார்.

உயிரிழந்தவர், வடமாகாண சபையின் முன்னாள்விவசாய அமைச்சர்பொன்னுத் துரை ஐங்கரநேசனின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தீர்வின்றித்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:- துறைமுகத்துக்கு வெளியே சுமார் 400 கொள்கலன்களும், துறைமுகத்துக்கு உள்ளே சுமார் 600 கொள்கலன்களும் சிக்கியுள்ளன. அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 3 ஆயிரம் கொள்க லன்கள் துறைமுகத்தில் உள்ளன. இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்க ளைத் துறைமுகத்திலிருந்து விடுவிப்ப தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்ந்தும் நீடிக்கிறது. அத்துடன், சுங்க அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படு வதில்லை - என்றார். (அ-ச-இ)

## ராஜபக்சக்களின்...

பக்ச நேற்றுக் கைது செய்யப்பட்ட பின் னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் துக்குச் சென்றிருந்த நாமல் ராஜபக்ச, அங்கு கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- சனிக்கிழமைகளில்கூட பொலிஸார் தற்போது தீயாக வேலை செய்கின்ற னர்போலும். நல்லது. எம்மை கைது செய்வதில் காட்டும் ஆர்வத்தை, பாதா ளக் குழுக்களை ஒடுக்குவதிலும் பொலி ஸார் காட்ட வேண்டும். மாறாக அரசியல் தேவைகளுக்காக சட்டத்தை நடைமு றைப்படுத்த முற்படக்கூடாது.

அரசாங்கம் அடக்குமுறையைக் கையில் எடுத்துள்ளது. மைத்திரி - ரணிலின் ஆட் சிக் காலத்தில் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் செயலாளராக இருந்தவரே, தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்றார். தமது இய லாமையை மூடிமறைப்பதற்காகவே அவ்வப்போது கைதுகள் இடம்பெறுகின் றன. நாம் தவறிழைக்கவில்லை. எமது கரங்களில் இரத்தம் படியவில்லை. எதற் கும் அச்சப்பட வேண்டியதும் இல்லை. நீதிமன்றத்தை நம்புகின்றோம். நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மோதல் காரணமாக மீனவர் மருத்துவமனையில்!

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாக மீனவர் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கடலில் பிறிதொரு படகில் வந்த மீனவர்களால் தான் தாக்கப்பட்டதாக அவர் மருதங்கேணி பொலிஸாரிடம் வாக்கு மூலம் வழங்கியுள்ள நிலையில், முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-27)


## வாடகைக்கு

வீடு / காரியாலய உபயோகத்திற்கு
55 அடி நீளம், 44 அடி அகலம், பரப்புடைய
**மாடி வீடு வாடகைக்கு உண்டு.**
**இடம் : டச்சு வீதி, சாவகச்சேரி.**
தொடர்புகளுக்கு:-
**077 675 7249**
(CS/57320) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள PICK ME காரியாலயத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- Office Assistent
- Marketing Executive

தொடர்புகளுக்கு:-
jaffnapickme@gmail.com
**077 473 7737**

## விற்பனைக்கு

சைக்கிள் விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு இலக்கம்:-
**077 955 0363**
(CS/57306) J-1

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) 1988 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் 8ல் செவ்வாய் 87 கிரக பாவமுடைய அரச உயர் தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு:- **077 083 3726**
(CS/57280) J-1

## பதவி வெற்றிடம்

யாழில் உள்ள பிரபல வைத்தியசாலையில்
பின்வரும் பதவிகளுக்காக தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றோம்.

* Maintenance Officer (பராமரிப்பு உத்தியோகத்தர்)
* Pharmacist Assistant (மருந்தக உதவியாளர்)
* Dental Assistant (பற்சிகிச்சை உதவியாளர்)
* MLT(மருத்துவ ஆய்வு கூட பரிசோதகர்)

குறிப்பு: யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிபரக்கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 05.02.2025 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
தொடர்புகளுக்கு: **074 202 7318**

## வீடு, காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில்
2 பரப்புக் காணியுடன் கூடிய
வீடு விற்பனைக்கு உண்டு.
காணி பிரித்தும் கொடுக்கப்படும்.
விலை - 36 மில்லியன்.
**077 247 4740**
(CS/57307) J-1

## வடக்கில் PickMe Taxi

நீங்கள் வைத்திருக்கும்
**முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், Car, Van, Lorry**
அனைத்தையும் **PickMe Taxi**
சேவையில் இணைத்து 100,000/-க்கும் அதிக
வருமானம் பெறலாம்.
**077 473 7737**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்புக் காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
Whats app:-
**+61 421 290 240**
(CS/56843) J-1

## விற்பனையாளர்கள் தேவை

யாழில் இயங்கி வரும் இலத்திரனியல்
ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை.
வயது எல்லை 21 - 45
கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
அழைப்பு எண்:- **076 324 1761**
(CS/57311) J-1

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கல்லூரி வீதி, காங்கேசன்துறையில்
2 பரப்பு காணி வீட்டுடன்
விற்பனைக்கு உண்டு.
**077 703 1162, 021 221 7034**
(CS/57283) J-1

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, Champion Lane - நந்தாவிலில் புத்தம் புதிய வீடு விற்பனைக்கு.

- 2, 3/4 பரப்பு
- 4 அறைகள், 2 குளியலறைகள்
- சுற்றுமதில்
- காணி பிரிக்கக்கூடிய நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீர்
- கட்டுக் கிணறும் உண்டு.

தொடர்பு:- **076 620 7597**
(CS/57285) J-1

## விரித்தி விழா

வடக்கில் உள்ள சிவில் சமூகத்துடன் இணைதல், ஈடுபடல் மற்றும் ஒத்துழைப்பு நல்கல்




பெப்ரவரி 01, 2025
கிளிநொச்சி மத்திய கல்லூரி

அறிவுபூர்வமான குழுக்கலந்துரையாடல்கள்
வண்ணமயமான கலாசார நிகழ்வுகள்
இளைஞர் மன்றங்கள்
ஆவணப்படங்கள் மற்றும் திரைப்படத்திரையிடல்கள்
கலை மற்றும் கலைஞர் விளக்கங்கள்
காட்சி கலைகள் மற்றும் நாடகம்
உற்சாகமூட்டும் கண்காட்சிகள்
விழிப்புணர்வு அமர்வுகள்
திறன்விருத்திப்பயிற்சி அமர்வுகள்
உள்ளூர் உற்பத்தியாளர்கள்
வேடிக்கைகள் நிறைந்த சிறுவர் வலயம்
வடக்கின் சுவைகளை ருசித்துப் பாருங்கள்

எங்களை இங்கே கண்டறியவும்
(CR/44172) J-1


## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
15.03.1936

மறைவு
20.01.2012

மீசாலை
அமரர் திருமதி
**புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**
(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் – தென்மராட்சி வலயம்)
திதி: அபரபக்க துவாதசி

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் பதின்மூன்றாகி தவிக்கின்றோம் உனைப்பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**குடும்பத்தினர்**

35 / 1A, குமாசாமி வீதி, கந்தர்மடம்.
"சிவகிரி" மீசாலை வடக்கு, மீசாலை.
72 /27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.
(CS 57298) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

சஞ்சீவி


Registered as a Newspaper

தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும்; ஆற்ற
அறஞ்செய் தருளுடையீர் ஆகுமின்; யாரும்
பிறந்தும் பிறவாதார் இல்.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 தை 12 ஞாயிற்றுக்கிழமை (26.01.2025) சிகரம் :27

● நிலாந்தன்



**ஒரு காலம் முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்கவைத்த ஒரு சமூகம், பண்பாட்டுச் செழிப்பு மிக்க ஒரு நடுத்தர வர்க்கத்தைக் கொண்ட ஒரு சமூகம், இப்பொழுது ஏன் இப்படித் தூர்ந்து போகின்றது? தன்னுடைய பற்களை தானே கிண்டி மணக்கும் ஒரு சமூகமாக எப்படி மாறியது ?**

# என் இனமே என் சனமே உன்னை உனக்கே தெரிகிறதா?

தமிழரசுக் கட்சியின் உள்முரண்பாடு நாடாளுமன்றத்திலும் பிரதிபலித்திருக்கின்றது. நாடாளுமன்றத்தில் சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக உரையாற்றியிருக்கிறார். ஒரு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வைத்து முறைப்பாடு செய்வது அநேகமாக இதுதான் முதல் தடவையோ தெரியவில்லை.

விமான நிலையத்தில் சிறீதரன் சிறிது நேரம் மறித்துவைக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதில் சொல்ல வேண்டும். அதேசமயம் அது தொடர்பாக சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களுக்கு சுமந்திரன் பதில்சொல்ல வேண்டும். அந்தக் கருத்துக்கள் சரியா பிழையா என்பதனை விமான நிலைய நிர்வாகம் வெளிப்படுத்த வேண்டும். இது தொடர்பான விசாரணைகளை நடத்தி உண்மையை வெளியே கொண்டுவரவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அதேசமயம் இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் தலைமைத்துவ முரண்பாடு பிரதிபலிப்பு களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் இங்கே இக்கட்டுரையின் குவிமையம்.

உட்கட்சிப் பூசல் நாடாளுமன்றம் வரை வந்துவிட்டது. ஏற்கனவே அது நீதிமன்றம்வரை சென்றுவிட்டது. இனி அதை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் எடுத்துச் செல்லலாமா? அல்லது பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாமா? சிறீலங்காவின் இன அழிப்புச் சட்டங்களை நிறைவேற்றிய ஒரு நாடாளுமன்றத்தில் சிறீதரன் தன்னுடைய கட்சிக்காரருக்கு எதிராக முறைப்பாடு செய்கிறார்.

எந்த நாடாளுமன்றத்தில் தமிழ்த் தரப்பு நீதிகேட்டுப் போராடுகின்றதோ, அதே நாடாளுமன்றத்தில் கட்சியின் உள்முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது. தமிழ்த்தேசிய நோக்குநிலையில் இது ஒரு வீழ்ச்சி. இது முதலாவது சம்பவம்.

அடுத்த சம்பவம், சில வாரங்களுக்கு முன் இடம்பெற்றது. கிளிநொச்சியில், கனகபுரம் துயிலுமில்லத்தில் இடம்பெற்றது. புனர்வாழ்வு பெற்ற முன்னாள் இயக்கத்தவர்கள் சிலர் கனகபுரம் துயிலும் இல்லத்தை தாமும் நிர்வகிக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்குத் தலைமை தாங்குபவர் இரண்டு கண்களையும் இழந்தவர். அத்துயிலுமில்லம் கடந்த 15 ஆண்டுகளாக சிறீதரனுக்கு விசுவாசமானவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு கண்களையும் இழந்த அந்த முன்னாள் இயக்கத்தவர் உட்பட அவரோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் சிறீதரனின் ஆதரவாளர்களுக்கும் இடையே அங்கு பலமான வாக்குவாதம் நடந்தது. முடிவில் பொலிஸார் தலையிட்டு இரண்டு பகுதியையும் சமாதானப்படுத்தினார்கள்.

இதில் சம்பந்தப்படும் இரண்டு தரப்புகளுமே போரால் பாதிக்கப்பட்டவர்கள். இதில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளிலுமே புனர்வாழ்வு பெற்ற போராளிகள் உள்ளனர். துயிலுமில்லங்களை ஒரு பொதுவான நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்று ஒரு தரப்பு கேட்கின்றது. இன்னொரு தரப்பு அதை ஏற்கனவே நிர்வாகித்தவர்களே தொடர்ந்தும் நிர்வகிக்கவேண்டும் என்று கூறுகிறது. இதில் யார் சொல்வது சரி என்று விவாதத்தைப் பிறகு வைத்துக்கொள்ளலாம். ஆனால் இது தொடர்பாக ஏற்பட்ட மோதலில் பொலிஸார் தலையிட வேண்டி வந்தது. எந்தப் பொலிஸ் கட்டமைப்பை இனஅழிப்பை முன்னெடுத்த சீறீலங்கா படைக்கட்டமைப்பின் ஒரு பகுதியாக தமிழ்த்தேசியவாதிகள் வர்ணிக்கின்றார்களோ, அதே பொலிஸ் கட்டமைப்பு ஒரு துயிலுமில்ல விவகாரத்தில் தலையிட்டு இருதரப்பையும் சமரசப்படுத்தவேண்டிய நிலை. இது இரண்டாவது சம்பவம்.

துயிலுமில்லங்களின் விவகாரத்தில் மட்டுமல்ல, ஏற்கனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களின் விடயத்திலும் ஒரு மோதல் ஏற்பட்டபொழுது அவர்கள் பொலிஸாரிடம் சென்று முறையீடு செய்தார்கள். யாரிடம் எதற்காக முறையீடு செய்வது என்பது தொடர்பாக தெளிவான அரசியல் பார்வை இல்லாத ஒரு சூழல். மேற்கண்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் மோதல் யாருக்கு இடையில் என்று பார்த்தால், தமிழ்த்தரப்புக்களுக்கிடையில்தான். யாரிடம் போய் முறையிடுகிறார்கள் என்று பார்த்தால், யாருக்கு எதிராக நீதியைக் கேட்கின்றார்களோ அவர்களிடம்தான். தமிழ் அரசியல் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? தமிழ் அரசியல் என்று சொல்வதை விடவும் தமிழ்ச் சமூகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? என்று கேட்பதுதான் அதிகம் பொருத்தமானது.

ஏனென்றால், கனடாவில் உள்ள ஒரு கோவிலில் இரண்டு அணிகள் மோதிக்கொண்ட காட்சி காணொலியில் வெளிவந்தது. அவர்கள் எவ்வளவு ஆக்ரோஷமாக மோதிக் கொள்கிறார்கள்? அதில் முடிவில் பொலிஸார் தலையிடுகிறார்கள். அது கனேடியப் பொலிஸ். ஆனால் அந்த விவகாரம் ஒரு கோவில் சம்பந்தப்பட்ட, கடவுள் சம்பந்தப்பட்ட விவகாரம். கடவுளின் சன்னிதானத்திலேயே ஒற்றுமையாக முடிவுகளை எடுக்கமுடியாத ஒரு சமூகமாக தமிழ் மக்கள் மாறிவருகிறார்கள்.





கனடாவில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பெரிய ஆலயங்களுக்கு ஏதோ ஒரு வழக்கு இருக்கின்றது. அண்மையில் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு நினைவையிட்டு நடந்த ஒரு வைபவத்தில், உரை நிகழ்த்திய வட மாகாண சபையின் ஆளுநர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார். "ஆலயங்கள் இப்பொழுது சமூக சேவைக்கு செலவழிப்பதை விடவும் வழக்குகளுக்கே அதிகமாகச் செலவழிக்கின்றன."

கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலும் கோவில் அறக்கட்டளைகளில் பிணக்குகளும் வழக்குகளும் உள்ளன. கொழும்பில் வசிக்கும் ஒரு பேராசிரியர் சட்டம் பயிலும் தனது மகனிடம் சொன்னாராம், நீ கோவில் வழக்குகளை மட்டும் எடுத்தாலே போதும் வாழ்க்கை முழுவதும் உனக்கு உழைப்பு இருக்கும் என்று. அந்தளவுக்கு கோவில்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. இந்துக் கோவில்கள் மட்டுமல்ல நவீன யாழ்ப்பாணத்தைச் செதுக்கிய திருச்சபைகளில் ஒன்று என்று வர்ணிக்கப்படுகின்ற தென்னிந்தியத் திருச்சபையும் நீதிமன்றத்தில் நிற்கின்றது. கட்சியும் நீதிமன்றத்தில், கோவில்களும் நீதிமன்றத்தில், திருச்சபைகளும் நீதிமன்றத்தில், பழைய மாணவர் சங்கங்களும் நீதிமன்றத்தில், ஏன் தமிழ் மக்கள் தங்களுக்கு இடையிலான பிணக்கைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்? அல்லது அவ்வாறான பிணக்குகளைத் தீர்த்துவைக்கக்கூடிய மூத்த சமூகத்தலைவர்கள், மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், வழிகாட்டிகள், முன்னோடிகள் தமிழ்மக்கள் மத்தியில் இல்லையா ? இருக்கிறார்கள்.

ஆனால் எல்லாரையுமே "மீம்ஸ்" ஆக்கிவிடும் ஒரு போக்கு அதிகரித்துவருகிறது. சமூகத்தில் யார் துருத்திக்கொண்டு தெரிகிறார்களோ, யார் சமூகப்பணி செய்கிறார்களோ, யார் அர்ப்பணிப்பும் தியாகமும்

07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பவோ முடிந்த காரியம்!



இளங்கோ ஏரம்பமூர்த்தி
(சித்த ஆயுள்வேத
இயற்கை வைத்தியர், சுவிஸ்)



## புங்குடுதீவுக்குப் போய்வந்த கதை

மபுங்குடுதீவுக்குள் நுழைந்து கொஞ்சத்தூரத்தில் இடதுபுறம் ஒரு பிள்ளையார் கோவில் (மடத்து வெளி ஸ்ரீவீரகத்தி விநாயகர்)வந்தது. மோட்டார் சைக்கிளை வீதியோரம் நிறுத்திவிட்டு கோயில் வாசலுக்குச் சென்று பார்த்தேன். உள்ளே சிலர் நின்றிருந்தார்கள். சரி, யாராவது வெளியே வந்தால், கண்ணகை அம்மன் கோவில் எங்கே இருக்கிறது என்று கேட்கலாம்தானே என்று நினைத்துவிட்டுப் பிள்ளையாரை வணங்கினேன். ஒருவரும் வெளியே வருவதாகத் தெரியவில்லை.

தற்செயலாகத் திரும்பிப்பார்த்தபோது வீதியின் மறுபுறத்தில் ஐம்பது மீற்றர் தொலைவில் தனியாக ஒரு பனைமரம். அதனைச்சுற்றி அழகாக வளர்ந்திருந்த ஓர் ஆலமரம். பைக்கையும் பிள்ளையாரையும் அங்கேயே விட்டுவிட்டு அந்த ஆலமரத்தை கிட்டவாகப்போய் ஒரு படம் எடுக்கலாம் என்று அருகில் சென்றேன். அதன் அழகை இரசித்துக்கொண்டிருக்கும் போது தற்செயலாகத் திரும்பிப் பைக்கைப்பார்த்தேன். அருகே ஒரு வயதானவர் என்னைப் பார்த்தபடி பைக்கின் அருகே நின்றிருந்தார். அருகே சென்றபோது என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"ஐயா எங்கயிருந்து வாறியள்?"என்று என்னைக் கேட்டார்.

"வணக்கம் ஐயா ! நான் மீசாலையிலிருந்து வாறன்"என்றேன்.

"இல்லை, எந்த நாட்டிலை இருந்து வந்தனீங்கள்?"என்றார் ஐயா.

மனதுக்குள் "எப்பிடி உடனை கண்டுபிடிக்கிறாங்கள் நான் வெளிநாட்டிலையிருந்து வந்தனான் எண்டு?"நினைத்தபடி, 'நான் சுவிசிலை இருந்து வந்தனான் 'என்றேன்.

அவர் உடனே மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவரின் மகனும் சுவிசில்தான் இருக்கிறாராம்.

"ஆரும் தெரிஞ்சாக்கள் இஞ்ச இருக்கினமோ?" என்றார் ஐயா. "இஞ்சை ஒருத்தரும் இல்லை ஐயா! என்ரை புங்குடுதீவுச் சிநேகிதர்மார் எல்லாம் சுவிசிலைதான் இருக்கினம். இஞ்சை அம்மன் கோயில் ஒண்டு கிட்டடிலை கட்டினதெல்லே, அதுக்குத்தான் வந்தனான். அந்தக்கோயிலுக்கு எப்பிடி ஐயா போறது?"எனக்கேட்டேன். "உப்பிடியே போங்கோ கொஞ்சத்தூரத்திலை கண்ணகைபுரம் எண்டு எழுதிக்கிடக்கும். அந்த றோட்டாலை நேர போங்கோ கோயில் கொஞ்சத்தூரத்திலை வந்திடும்" என்றார். அவருக்கு நன்றி சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொண்டேன்.

கொஞ்சநேரம் போனபின்பு கண்ணகைபுரம் என்ற வரவேற்பு வளைவு வந்தது. அட ஊருக்கே கண்ணகைபுரம் என்று பெயர் வைத்திருக்கிறார்களே. அதுசரி கண்ணகைபுரம், கண்ணகை அம்மன் என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார்களே, இதில்வரும் கண்ணகை என்பது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தில் வருகின்ற கண்ணகியா,அல்லது அம்மனுக்குக் கொடுக்கப்பட்ட நூற்றியெட்டுப் பெயர்களில் கண்ணகை என்ற பெயரும் உண்டா? இவ்வாறான கேள்விகள் எழுந்தன. யாரையாவது கேட்கவேண்டும். இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டு போகும்போது அம்மன் கோவில் பின்புற வீதியைச் சென்றடைந்தேன்.

மாதம் ஐப்பசியாகிவிட்டது. ஆனாலும் சூரியன் தன் கதிர்களால் சுட்டுக்கொண்டிருந்தான். வடக்கு வீதியில் இரண்டு மூன்று மரங்கள் நின்றன. அதன் நிழலில் ஒரு பழைய மோட்டார் சைக்கிள் நின்றிருந்தது. அதனருகில் என்னுடைய பைக்கையும் நிறுத்தினேன்.

"இப்ப ஹெல்மெட்டை என்ன செய்வது? கொண்டுபோனால் 'பிறியாகக்' கும்பிட முடியாதே, வைத்துவிட்டுப் போனால் யாராவது எடுத்துவிடுவார்களோ? சீ, கோவிலுக்கு வருபவர்கள் திருடமாட்டார்கள்" என நினைத்துக்கொண்டேன். ஈரான் நாட்டில் ஒரு புத்தகக் கடை இரவு, பகல் எந்தவேளையும் திறந்தபடி இருக்குமாம். பணத்தை அங்கே உண்டியலில் போட்டுவிட்டு புத்தகத்தை எங்கட பாட்டில எடுத்துக் கொண்டு போகலாமாம். வாசிப்பவர்கள் களவெடுக்கமாட்டார்கள், களவெடுப்பவர்கள் வாசிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில்.

அதுசரி இந்தக்கோவிலுக்கு வருபவர்கள் என்னசெய்வார்கள்? கும்பிட வருபவர்கள் களவெடுப்பார்களா? பக்கத்தில் நின்ற பைக்கைப் பார்த்தேன். பழைய ஹெல்மெட் ஒன்று அதில் கொழுவியபடி இருந்தது. சரி நடக்கிறது நடக்கட்டும். நானும் கொழுவிவிட்டு கோவிலைநோக்கி நடந்தேன். நான் போகின்ற வேளை மதியப் பூசை நடந்துகொண்டிருந்தது. நல்ல கணக்கான நேரந்தான் வந்திருக்கிறன். கால்களைக் கழுவிவிட்டு சேர்ட்டைக் கழட்டிவிட்டு உள்ளே நுழைந்து அம்மாளாச்சியை வணங்கினேன்.

"அம்மாளாச்சி எல்லாரும் நல்லாய் இருக்கோணும்!

எல்லாரையும் காப்பாற்றவேணும்!"

கோவில் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. ஆனால், ஒரு பத்துப்பதினைந்து பக்தர்கள்தான் வந்திருந்தார்கள். அதிலும் நான்கு பேர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார்கள். சிறப்பாகக் கோவிலை அமைத்திருந்தனர். சித்திர வேலைப்பாடுடைய தூண்கள், கோபுரம் எல்லாம் அற்புதமாக இருந்தது. மக்களுக்குக் கண்ணாடி வழங்குதல் முதலான சமூகசேவைகளையும் அந்தக்கோயில் செய்வதாக அங்கு ஒருவர் கூறினார். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

*"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயின்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"* *(திருமந்திரம்)*

கோவிலில் வரைந்துவைக்கப்பட்ட பகவானின் திருவுருவத்தின் முன்னர் நீ படைக்கும் படையல் நடமாடும் கோவில்களான ஊன் உடல்களில் வாழும் நம் இறைவனுக்கு ஒருபோதும் சென்றுசேருவதில்லை. ஆனால், நடமாடும் கோவில்களான ஏழை மனிதர்களின் ஊன்உடல்களில் வாழும் நம் இறைவனுக்கு நீ ஒன்று கொடுத்தாய் என்றால், அது கோவிலில் வரைந்துவைக்கப்பட்ட பகவானிடம் உடனே சென்றுசேர்ந்துவிடும் என்று திருமூலர் சொன்னதை நினைவுகூர்ந்தேன்.

அந்த ஹெல்மெட்.....? அட மூட மனமே அம்மாளாச்சி உன்னையும் காப்பாற்றுவா, உன்ரை ஹெல்மெட்டையும் காப்பாற்றுவா, யோசிக்காதே. ஒரு கால்மணிநேரம்தான் கோவிலினுள் நின்றேன். பூசை நடக்கும்போதே காணிக்கை செலுத்திவிட்டு கண்ணகை அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியே வந்தேன். அடுத்தமுறை வரும்போது நன்கு திட்டமிட்டு நிறைய நேரம் ஒதுக்கி வரவேண்டும். பன்னிரண்டே முக்காலுக்கு மருமகளைக் கூட்டப் போகவேண்டும். இப்பொழுது நேரம் பதினொன்றரை. இன்னும் கொஞ்சம் நேரம் இருக்கிறது. பக்கத்தில் அற்புதமான கடல். கடலைக் கண்டவுடன் கடற்கரைக்குச் செல்ல ஆசை. ஆனால் அந்த ஹெல்மெட். சரி போய் ஹெல்மெட்டை எடுத்துக்கொண்டு கடற்கரைக்குப் போவம். தூரத்தில் போகும்போதே பார்த்தேன். ஹெல்மெட் நல்ல பிள்ளை போல அப்படியே இருந்தது. ஹெல்மெட்டை எடுத்துக்கொண்டு வேகமாகக் கடற்கரைக்குச் சென்றேன்.

எத்தனை அழகு இந்தக்கடலும் முன்னால் உள்ள சவுக்குத்தோப்பும். சவுக்குத்தோப்பைப் பார்த்தவுடன் எங்கள் சுவிஸ் நாட்டில் உள்ள ஊசியிலைக்காடு போல மிகவும் அற்புதமாக இருந்தது. இன்னும் கொஞ்சநேரம் நின்று அந்தக்கடலையும் காற்றையும் சவுக்குத்தோப்பையும் அனுபவிக்கத்தான் ஆசை. ஆனால் என்ரை மருமகள்! வேகமாக பைக் இருந்த இடத்திற்குத் திரும்பினேன்.

என்னுடைய திட்டப்படி இன்னும் நாற்பத்து இரண்டு நிமிடங்களில் மருமகளின் பாடசாலைக்குச் சென்றுவிடுவேன்.

ஆனால் கண்ணகை அம்மாவின் திட்டம் வேறு விதமாக இருந்தது.




(பயணம் தொடரும்)



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

15

இலங்கையில் தனிச்சிங்களச்சட்டத்தை அறிமுகம் செய்து இலங்கையில் முதல் தடவையாக சிங்களதமிழ் இனங்களுக்கிடையே பிளவை உருவாக்கி இரத்த ஆறு ஓட வழிவகுத்தவர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா. உண்மையில் பண்டாரநாயக்கா பச்சைத்தமிழன். பதவிக்காக இனவாதத்தைக் கையில் எடுத்தவர். 17ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நாயக்கர்களின் ஆட்சி முடிவுக்கு வந்து ஐரோப்பியரின் ஆதிக்கம் வலுப்பெறத்தொடங்கியது. இந்தக் காலப்பகுதியில் கண்டியில் வந்து குடியேறிய நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவர்களே பண்டாரநாயக்காக்கள். இதன்காரணமாகவே இவர்கள் தமது பெயருடன் நாயக்க என்ற சொல்லையும் இணைத்துள்ளனர். இவர்களில் சிலர் பின்னாளில் தெலுங்கு பேசத்தொடங்கினர்.

1815 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கும் கண்டிப் பிரதானிகளுக்கு மிடையே செய்துகொள்ளப்பட்ட கண்டி ஒப்பந்தத்தில் கண்டிப் பிரதானிகள் ஏழு பேர் தமிழிலேயே ஒப்பமிட்டுள்ளனர். கண்டிய ஒப்பந்தத்தைச் சுவடிகள் காப்பகப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஒருவர் நூலாக வெளியிட்டுள்ளார். இந்த நூலின் பிரதி யாழ்ப்பாண நூலகத்தில் உள்ளது. இவ்வாறு தமிழில் ஒப்பமிட்டவர்களில் ரத்வத்தை துசாவையும் ஒருவர். பண்டாரநாயக்கவின் பாரியார் சிறிமாவோ அம்மையாரின் பேரன். சிறிமாவோ அம்மையாரின் புத்திரி சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரத்வத்தையின் கொள்ளுப்பேரன். தமிழ் அரசியல்கைதிகளை தனது சப்பாத்துக் கால்களை நக்கச்சொல்லி உத்தரவிட்டு இப்போது கம்பி எண்ணிக்கொண்டிருக்கும் லொஹான் ரத்வத்தை இவர்களின் பரம்பரையில் ஆறாவது அல்லது ஏழாவது தலைமுறை என்று நினைக்கிறேன்.

தனிச்சிங்களச்சட்ட விவாதத்தின்போது சுந்தரலிங்கம் பண்டாரநாயக்கவைப் பார்த்து "நீ ஒரு பச்சைத்தமிழன் இப்போது பதவிக்காக இனவாதத்தைக் கக்குகிறாய் உனது கோத்திரம் நீலப்பெருமாள் கோத்திரம்"என்றார். பண்டாரநாயக்க எழுந்து பின்கதவால் வெளியேறிவிட்டார். நீலப்பெருமாள் கோத்திரம் பற்றி ஜேம்ஸ் இரத்தினம் ஒரு நூல் எழுதியுள்ளார்.

சந்திரிகாவின் ஆட்சியிலும் ஒரு சிங்களவர் சந்திரிகா நாயக்க வம்சத்தில் வந்த தமிழர் என Sunday Leader பத்திரிகையில் எழுதியிருந்தார்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெயச்சந்திரன் எனும் வசீகரக்குரலோன்



○ கோகுலராகவன்

ஒரு வசீகரக் குரல் பாடகன் மறைந்து விட்டான். ஆனால் அவன் குரல் காற்றில் முழுவதும் நிறைந்திருக்கிறது. காற்று அழகானது..
காற்றில் நறுமணம் கலக்கும் போது காற்று இன்னும் மனதை மயக்கி விடுகிறது. இந்த இனிய நறுமணமே அந்தப் பாடகரின் குரல். சொல்லாமலே யாரையும் கேட்க வைக்கும். மனதைக் கிறங்கடிக்கும், பல்லாயிரம் பாடல்களை காற்றிலே வீசி எறிந்து விட்டுப்போய்விட்டான் அந்த உயிர்ப்பாடகன்.
அவன் எதைப் பாடினாலும் இருந்து கேட்கவேண்டும். எழும்பி யார்தான் போக முடியும்? இராசத்தியின் காதலை இரசிகர்களிடம் அள்ளிக்கொடுத்துவிட்டவனிடம் இரகசியமாகக் கேட்கவேண்டும் இராசாத்தியின் முகவரியை .
இதயம் ஏங்கும் இனிய பாடல்கள் அவன் குரலில் வழிந்து ஓடும். அவன் குரலில் யார் தேனை, திரவியத்தை அள்ளிக் கொடுத்து வைத்தார்கள்?
மாஞ்சோலைக் கிளி அவன்தான், அந்த நாயகி அதற்கு போதாத உவமை. அதைவிட ஒரு பேரழகியைத் தேடியிருக்க வேண்டும். வசந்தகால நதி பாடி ஓய்ந்தது என்று கவிஞர் கண்டது கதையையா? இந்தத் தெய்வீகக் குரலையா?
எந்தப்பாடலைத் தொட்டாலும் அது அவன் குரலுக்கான உவமிப்பாகவே எனக்குத் தோன்றுகிறது.
"கடலலை கால்களை முத்தமிடும் புதுகலை"



"என்றொரு பாடல் அவன் குரலில். என்னவிதமான நளினம் கலந்து பாடினான் .
உங்களுக்கு ஓர் உயிர்க்காதல் இருந்தால் அது அந்தப் பாடலில் நிறைந்திருக்கும்.
தலை நரைத்தாலும்,
தாடி நரைத்தாலும்,
கூன் விழுந்தாலும்,
ஒரு தடவை முகம் பார்க்க ஏங்கவைக்கும் அவன் குரல்.
யார் முகம்.?
அவரவர் எண்ணம் சார்ந்தது.
"புல்லைக்கூட பாடவைத்த புல்லாங்குழல்" என்றால் அவன் குரல் உலகையே பாட வைத்த மாயக்குரல்.
அது அவனது வரம்.
அவனோ இரசிகனின் சாகாவரம்.
வசனத்தைக் கொடுத்தாலும்
தேன் குரலில் தெய்வீகமான இராகமாகப் பாட அவரால் மட்டுமே முடியும்.




'வண்டி மாடு முன்னே போக'எங்கள் காதுகள் அவன் குரலில் பின்னே இளங்காலத்தை தேடிப் போவதைத் தவிர்க்கவே முடியவில்லை.
"பூவண்ணம் போல நெஞ்சம்" இந்த பாடல் இந்தப் பாடகனுக்காக எழுதப்பட்ட பாடலாகவே எனக்குத் தோன்றுகிறது.
சலீல், சௌத்ரி, சுசீலாவோடு இவரையும் சேர்த்து குழைய வைத்திருப்பார்.
பாடலின் காட்சியோடு இவரின் குரல் இணைந்திருப்பது எவ்வளவு அற்புதம்.
அவரின் ஒரே ஒரு பாடல்
எங்களின் 'பொங்கிடும் கடற்கரை ஓரத்தில்' இன்னும் ஒலித்து கொண்டிருக்கிறது. காலம் முழுவதும் அவர் பாடல்கள் ஒலித்து கொண்டே இருக்கும். ■

## உணர்ந்தினம்

பாகம் 3

14

○ இராகவன்

நவண்ணா போட்ட போஸ்ட் காா்ட் கிடைச்ச கையோட "அண்ணா" எண்டாள் மறுநாள் சைக்கிளில வந்துசேந்தார். உங்களுக்கு "நான்கடவுள்" படத்தில ராஜேந்திரன் எண்டொரு நடிகர் அறிமுகமானவர் எண்டது தெரிஞ்சிருக்கும். அதிலயிருந்து அவரின்ரை பெயர் "நான்கடவுள் ராஜேந்திரன்" எண்டு மாறிட்டுது. அவரை மொட்டை ராஜேந்திரன் எண்டும் சொல்லுவினம். அண்ணாவும் பாக்கிறதுக்கு அச்சொட்டாய் மொட்டை ராஜேந்திரன் போலவேயிருப்பார். நவண்ணா அவரை வீட்டை கூட்டிக்கொண்டு வந்தாப்போல அவர் "ஒரு குத்துவிளக்குக் கொளுத்துங்கோ!" எண்டார். உடனை அம்மா குத்துவிளக்குக் கொளுத்திக் குடுத்தா. அவர் அதை நடுவிறாந்தையில வைச்சிட்டு அட்டணக்கால் போட்டிருந்தார். பிறகு சேர்ட் பொக்கற்றுக்குள்ளால ஒரு கறுத்த நூலில கழுகு பறக்கிற மாதிரி வட்டப் பென்ரன் கட்டின பொருளை எடுத்து குத்துவிளக்குச் சுடருக்கு மேலை பிடிச்சுக்கொண்டிருந்தார்.

ஒரு அஞ்சு நிமிசங்கழிய அதையெடுத்துப் பொக்கற்றுக்குள்ள போட்டுக்கொண்டு "மூதேவியக் காவல் வைச்சுத்தான் இந்தச்செய்வினை செய்துகிடக்கு. இப்ப நீங்கள் உடனடியாக ஒற்றைப் பழஞ்செருப்பு அடவியன் கைவிளக்குமாறு, பழஞ்சுளகு, கரி,ரொட்டி இதெல்லாம் ஒழுங்கு செய்யுங்கோ" எண்டார்.

"அதென்ன கரிரொட்டி?" எண்டு அம்மா கேட்டா.

"கரித்துண்டுகளை எடுத்துத் தூளாக்கிப்போட்டு ஒரு சிறங்கை கோதுமைமா எடுத்துக் கலந்து ஒரு ரொட்டி சுடுங்கோ. அதுதான் அம்மா கரிரொட்டி "எண்டவர் சொன்னார். பிறகென்ன அம்மாவும் கரிரொட்டியைச் சுட்டு மற்றச்சாமான்களோட ஒழுங்கு பண்ணிக்குடுக்க அவர் அதை வடிவா ஒருதடவை செக்பண்ணிப்போட்டு, "இப்ப இந்தளவு சாமானையும் கொண்டுபோய் வளவுக்கு வெளியில வைச்சிட்டு வாங்கோ! "எண்டு சொன்னார்.

அப்ப எங்கட வீட்டுப் பின்வளவுப்பக்கமாய் இருக்கிற டாக்குத்தற்ற காணிக்குள்ளயிருந்து எங்கட வீட்டுக்கு வாறதுக்கு ஒரு கடப்பு இருந்தது. இந்தச்சாமான்களைக் கொண்டு போய் அந்தக்கடப்புக்கு வெளியில அதாவது டாக்குத்தற்ற காணிக்குள்ள அம்மா வைச்சிட்டு வந்தாப்போல அண்ணா திரும்பவும் குத்து விளக்குக்கு முன்னால அட்டணக்கால் போட்டிருந்து, அந்த கறுத்த நூல் கோர்த்த கழுகுப் பென்ரனை விளக்குச்சுடருக்கு மேல கொஞ்ச நேரம் பிடிச்சுக்கொண்டிருந்தார்.

பிறகு பக்கெண்டு எழும்பி "ஒரு மண்வெட்டிக் கொண்டுவாங்கோ" எண்டார். நவண்ணா மண்வெட்டிய கொணர்ந்தான். "எனக்குப் பின்னால வாங்கோ "எண்டிட்டு அவர் முன்னால போக நவண்ணா பின்னால போனார். நாங்கள் எல்லாம் அவனுக்கு பின்னால இழுபட்டம் .அண்ணா வீட்டுக்கு முன்வாசல்ல இறங்கி ஒரு இடத்தைக் கையால காட்டி "இதில வெட்டுங்கோ "எண்டார் . அவர் காட்டின இடம் ஓட்டால தண்ணீர் வந்து விழுகிற தாழ்வாரம். நாங்கள் எல்லாம் இந்தளவு நாளும் மண்வெட்டியெடுத்து உருத்திப் பார்த்தது ஒத்தாப்பு தாவாரத்து மண்தான் .

அதாவது கிடுகால மேய்ஞ்ச தாவாரம். அண்ணா வெட்டச்சென்னது ஓட்டால தண்ணீர் விழுகிற தாவாரம். முருகன் கோயில் ஐயர் சொன்னது தண்ணீர் விழுகிற தாழ்வாரம் தானே. நவண்ணா இந்த வியூவில 'திங்க்' பண்ணேல .அண்ணா காட்டின இடத்தில நவண்ணா மூண்டு வெட்டுவெட்டினாப்போல"இனிவெட்ட வேண்டாம் "எண்டு அண்ணா சொன்னார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரவனின் 'போர் உலா'வை முன்னிட்டு சில நினைவுகள்...

டிசே தமிழன்




1.

மலரவன் எழுதிய 'போர் உலா'வை மீண்டும் வாசிக்கத் தொடங்கியிருக்கின்றேன். இதை எனது பதின்மத்தின் தொடக்கத்தில் தமிழில் வந்தபோது வாசித்திருக்கின்றேன். அப்போது யாழ்ப்பாணம் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. 'போர் உலா'வை சுன்னாகம் பேருந்து நிலையத்துக்கருகில் இருந்த புத்தகசாலையில் வாங்கி வாசித்திருக்கின்றேன். 13/14 வயதுகளில் கையில் காசு புழங்குவதே அரிதென்பதால், புதுப் புத்தகங்களை வாங்கி வாசிப்பதென்பது பெரும் சாதனை போல அன்று இருக்கும். அப்படி காசு கொடுத்து புதிதாய் வாங்கிய இன்னொரு புத்தகம் புதுவை இரத்தினதுரையின் ' பூவரம் வேலியும், புலுனிக் குஞ்சுகளும்' என்ற கவிதைகளின் பெருந்தொகுப்பு.

இப்போது 'எழுநா'வில் எழுதுவதற்காக ஆங்கிலத்தில் வந்த 'போர் உலா'வை மீண்டும் வாசிக்கின்றேன், இந்த நூலை தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மாலதியை நான் வன்னியில் நேரில் சந்தித்திருக்கின்றேன்.

முப்பது வருடங்களுக்கு மேல் நியூசிலாந்தில் வசித்துவிட்டு மீண்டும் தாய்நிலம் திரும்பியிருந்தார். மனிதவுரிமைகள் சம்பந்தமாக செஞ்சோலைக்கு வந்து பேசிக்கொண்டிருந்தார். மாலதி, செஞ்சோலைக்குப் பொறுப்பான ஜனனி அக்காவிடம், 'இப்படி அநாதரவராக இருக்கும் பெண்பிள்ளைகளை, இயக்கப் போராளிகளான நீங்கள் வளர்ப்பதால் அவர்களும் இயக்கத்தில் இயல்பாக சேர்ந்து விடுவார்களே, இது சரியில்லை அல்லவா?' எனக் கேட்டபோது நானும் சாட்சியாக இருந்திருக்கின்றேன்.

அதனால்தான் அவர்களை இப்போது உள்ளே வைத்து படிப்பிக்காமல், மற்றவர்களும் போகும் சாதாரண பாடசாலைகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றோம் என்று பல உதாரணங்களை ஜனனி அக்கா சொல்லிக் கொண்டிருந்தார். நானும் பின்னர் அங்கிருந்த பெண் போராளிகளிடம், இங்கே வளரும் பிள்ளைகள் இயக்கத்தில் போய்ச் சேர்வதில்லையா எனக் கேட்டேன். அவர்கள் அப்படிச் சேர நாங்கள் இயக்கத்தில் விடுவதில்லை. என்றாலும் சில பேர் அப்படி இங்கிருந்து தப்பியோடி வேறு பெயரில் இயக்கத்தில் இணைந்திருக்கின்றார்கள் என்றும், அவர்களை மீண்டும் இங்கே மீட்டுக்கொண்டு வந்திருக்கின்றோம் என்றும் சொன்னார்கள். அப்படி ஓடிப் போய் இயக்கத்தில் சேர்ந்து திரும்பி வந்த சில்ரை செஞ்சோலைக்குள் சந்தித்திருக்கின்றேன்.


இவற்றையெல்லாம் ஏன் சொல்கின்றேன் என்றால் புலிகளை விளங்கிக்கொள்வதென்பது மிகச் சிக்கலான விடயம். அதுவும் 30 வருடங்களுக்கு மேலாக இயங்கிய, தம்மை மீறி எவரையும் இயங்க விடாத ஓர் இயக்கத்தை ஒற்றைப்படையாக வைத்து எதையும் எளிதில் விளங்கிவிட வும் முடியாது. எனவேதான் இப்போது புலிகளை ஆதரித்தோ, எதிர்த்தோ மிகைப்படுத்தி வரும் படைப்புகளை மெல்லிய புன்முறுவலோடு விமர்சிக்கக்கூட விருப்பில்லாது கடந்துபோய்விட முடிகின்றது.

மனிதவுரிமைகள் சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்த இதே மாலதி வன்னிக்குள் இறுதியுத்தம் முடியும்வரை புலிகளின் சமாதானக் காரியாலத்தில் இயங்கியிருக்கின்றார் என்பதைப் பின்னர் அறிந்துகொண்டேன். யுத்தம் மிக மோசமாக நடந்த காலங்களிலேயே, வேறு எதுவும் செய்வதற்கு வழியற்றபோது, மாலதி இந்நூலை அங்கிருந்தபடி தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்திருக்கின்றார் என்ற குறிப்பு இந்த ஆங்கில நூலில் இருக்கின்றது.

இறுதி யுத்தம் அவரை அதிர்ஷ்டவசமாக உயிர் தப்ப விட்டிருக்கின்றது. அதனால் மலரவனின் 'போர் உலா'வை நாங்கள் ஆங்கிலத்திலும் இப்போது வாசிக்க முடிகின்றது. ஆங்கிலப் பதிப்பை பெங்குவின் பதிப்பகம் வெளியிட்டிருக்கின்றது.

2.

ஈழப் போராட்ட வரலாற்றிலே 'போர் உலா' மிக முக்கியமான பிரதி. மாங்குளம் இலங்கை இராணுவம் முகாமை அழிக்க, மணலாற்றில் இருந்து (இப்போது சிங்களக்குடியேற்றம் நிகழ்ந்து வெலி ஓயா என அழைக்கப்படுகிறது), மாங்குளம் செல்லும் பயணத்தையும், அம்முகாம் மீட்கப்பட்டதையும் மலரவன் இதில் லியோ என்கின்ற கதாபாத்திரத்தினூடாக எழுதுகின்றார். மணலாற்று காட்டிலிருந்து தொடங்கும் பயணம் இறுதியில் மாங்குளம் இராணுவத் தகர்ப்புடன் முடிவடைகின்றது. ஆனால் அந்தப் பயணத்தில் லியோ என்கின்ற பாத்திரம் சந்திக்கும் மக்கள், வறுமை/சாதியப் பெருமிதங்கள், இராணுவத்தால் கொல்லப்பட்ட மனிதர்களின் உறவுகள் என்று பலவற்றை அவர் தொட்டுச் செல்கின்றார். ஒருவகையில் இது அந்தக்காலத்தைய வன்னி மக்களின் வாழ்க்கையைச் சொல்லும் ஒரு முக்கிய ஆவணமாகவும் ஆகின்றது. மேலும் அவர் மக்களை/போராட்டத்தை/யுத்தத்தை மட்டுமில்லாது மிக நிதானமாக இயற்கையை விவரித்துச் செல்வது அவ்வளவு அருமையாக இருக்கின்றது.



இதைவிட வியப்பாக இருப்பது, மலரவன் 'போர் உலா'வை எழுதும்போது அவருக்கு 18 வயதுதான். இத்தகைய ஓர் உண்மை கலந்த புனைவை ஒருவர் தனது பதின்மத்திலேயே எழுதிவிட்டார் என்கின்றபோது ஒரு வியப்பு வருகின்றது. மலரவன் இதன் பிறகு இரண்டு வருடங்களில், அதாவது அவரது 20 வயதில் பலாலியில் நடந்த முக்கிய தாக்குதலில் இறந்துவிடுகின்றார். அந்தப் பலாலி தாக்குதல் என் நினைவில் நன்கு இருக்கின்றது. ஏனெனில் எங்கள் கிராமங்களை அச்சுறுத்தும் முக்கிய இராணுவ/விமானத் தளமாக பலாலி அன்று இருந்தது. அந்தத் தாக்குதலில் இயக்கத்தின் முக்கியமானவராக இருந்த செல்வராஜா மாஸ்டர் என்பர் உள்ளிட்ட 50இற்கும் மேற்பட்ட போராளிகள் இறந்திருந்தனர். எனினும் அப்போது லியோ என்கின்ற மலரவன் இறந்தார் என்பதை அறிந்தவனில்லை. இந்தப் பிரதி மலரவன் இறந்தபின்னே அவரது உடமைகளோடு கண்டுபிடிக்கப்பட்டு இயக்கத்தால் வெளியிடப்படுகின்றது.


இந்த 'போர் உலா' என்கின்ற பிரதியை மலரவன் எழுதுகின்றபோது அவருக்கு 18 வயதேதான். நம்பவே முடியாதிருக்கின்றது அல்லவா? அதன் பின் 20 வயதில் களத்தில் நின்றபோது விழுந்த ஷெல் தாக்குதலால் ஏற்பட்ட காயத்தால் மரணமடைந்தாலும், அதற்கு முன்னரான ஒரு சமரில் காயமடைந்து அவரது சிறுநீரகம் ஒன்றையும் இழந்திருக்கின்றார்.

இருபது வயதுக்குள் உக்கிரமான சமர்க்களத்தில் களமாடியபடி மலரவன் தனியே 'போர் உலா' மட்டும் எழுதவில்லை. 'புயல் பறவை' என்ற நாவலையும், வேறு பல கவிதைகளையும் எழுதியிருக்கின்றார். அவரின் ஒன்றிரண்டு நாவல்கள் கிடைக்காமலே அழிந்து போயிருக்கின்றன எனச் சொல்லப்படுகின்றது. 'போர் உலா' முடியும்போது அவர் அடுத்து பங்குபற்றிய சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதல் பற்றியும் எழுத இருப்பதான குறிப்பையும் பார்க்கின்றோம். அதை எழுத முன்னர் மலரவன் காலமாகிவிட்டார் என்பது துயரமானது. அந்தச் சிலாவத்துறை சமரில் மலரவன் படுகாயமுற்று தனது சிறுநீரகம் ஒன்றையும் இழக்கின்றார்.

'புயல் பறவை' நூல், பின்னர் மலரவனின் தாயால் வெளியிடப்பட்டிருக்கின்றது. 'புயல் பறவை' நூலில் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து இயக்கத்துக்குப் போகின்றவர்களையும், இயக்கத்தில் பெண்களைச் சேர்ப்பது குறித்த உரையாடல்களும் இருக்கின்றன என அறிகின்றேன். (இந்நூல்களைத் தேடுபவர்க்கு, 'போர் உலா', 'புயல் பறவை' இரண்டையும் 'விடியல்' பதிப்பகம் இப்போது வெளியிட்டிருக்கின்றது).

மலரவன் சிலாவத்துறை சமரில் (சிறுநீரகம் இழந்தபோது) காயங்களை ஆற்றுப்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திக் கொண்டிருந்தபோது அவரின் தாயாரோடு இந்தப் பிரதிகளைப் பற்றிப் பேசியும், திருத்தங்களும் செய்திருக்கின்றார் என்று அவரது தாயான எழுத்தாளர் மலரன்னை ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். மலரவன் இயக்கத்தில் இருந்தபோது அப்போது முக்கிய ஒரு படைத்துறையாக வளர்ந்து கொண்டிருந்த பசீலன் 2000 பீரங்கிப்படையில் முன்னணிப் படைவீரராக இருந்தவர். இது இயக்கத்தின் உள்ளூர்த் தயாரிப்பு மோட்டார்களைக் கொண்டிருந்தது. யாழ் கோட்டையை அன்று இயக்கம் கைப்பற்றியதில் இந்தப் படையணியின் பங்கும் அளப்பரியது என்பதை அன்றையகாலத்தில் யாழில் இருந்தவர்கள் அறிவர். பசீலன் என்பவர் வன்னி மாவட்டத் தளபதியாக இருந்து இந்திய இராணுவ காலத்தில் கொல்லப்பட்டவர். அவர் நினைவாக இந்தப் படையணி தொடங்கப்பட்டது.

போர் உலாவிலும் மலரவன் இந்தப் படையணியின் ஒருவராகவே தாக்குதலுக்கு வருகின்றார். மணலாற்றில் இருந்து பீரங்கிகளையும் நகர்த்த வேண்டும். அதேசமயம் இலங்கை இராணுவத்தின் விமானங்களின் கண்களுக்கும் தெரியக்கூடாது. இதை நகர்த்தும்போது சாதாரண மக்களும் காணக்கூடாது. இல்லாவிட்டால் ஒரு தாக்குதல் நடக்கப்போகின்றது என்ற செய்தி பரவி, முழுத்தாக்குதலுமே தோல்வியில் முடியும் ஆபத்தும் இருக்கின்றது.

3.

மலரவன், மாங்குளம் முகாமில் பங்குபற்றியபின், அவருக்கு இருந்த எழுத்துத்திறமையால் புலிகள் அவரை ஒவ்வொரு சண்டையின்போதும் நடப்பவற்றையும், அதை ஆராய்ந்து எழுதுவதற்குமென நியமித்தி ருக்கின்றனர். அவர் எழுதிய முக்கிய இன்னொரு சண்டை அனுபவம், அவரின் பொறுப்பாளராக அப்போது இருந்த தமிழ்ச்செல்வனால் பாராட்டப்பட்டபோதும், நிறைய இராணுவ இரகசியங்கள் அதில் இருந்ததால் அது பிரசுரமாகாம லேயே போய்விட்டது. அதுவும் வெளிவந்திருந்தால் இன்னொரு 'போர் உலா' போல முக்கியமான படைப்பாக ஆகியிருக்கும்.

மாங்குள முகாம் தகர்ப்பு பெரும் செய்தியாக எங்களின் காலத்தில் பேசப்பட்டது. அதில்தான் புலிகளின் முக்கியமான ஒருவராக இருந்த லெப்.கேணல் போர்க் தற்கொலைப்போராளியாக சென்று முகாம் தகர்ப்பைத் தொடக்கி வைத்தவர். எங்கள் காலத்தில் ஒருவருக்கு லெப்.கேணல் என்ற பதவி கொடுக்கப்பட்டால், பின்னரான காலத்தில் கேணல் போன்ற பெரும் தளபதிக்கு நிகர்த்தவர். புலிகளின் மாவட்டப் பொறுப்பாளர்களாக இருந்த தளபதிகளான ராதா, விக்டர் போன்ற மிகச் சிலருக்கே இந்த லெப்.கேணல் பதவி அப்போது கொடுக்கப்பட்டிருந்தது. (முதலாவது கேணல் பட்டம் பின்னர் கிட்டுவோடு தொடங்கியிருக்க வேண்டும்). போர்க்கின் புகைப்படத்தோடு வந்த மாங்குளம் முகாம் தகர்ப்பை அவ்வளவு பதைபதைப்புடன் அன்று வாசித்ததும் நினைவில் இருக்கின்றது.

இந்த வாழ்க்கைதான் எவ்வளவு விசித்திரமானது. அது போல இன்னொரு சுவாரசிய மான (அப்படிச் சொல்லலாமோ தெரியாது) விடயமும் நினைவுக்கு வருகின்றது. வன்னியில் இருந்த சமயம், எனக்கு பால்ராஜோடு பேசும் ஒரு சந்தர்ப்பம் நண்பர்களோடு வாய்த்தது. அப்போது பிரிகேடியர் தரத்தில் இருந்த பால்ராஜ், தற்செயலாக மாங்குளம் முகாம் தகர்ப்புப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். மலரவன் எழுதிய போர் உலாவில் வந்த தாக்குதலை முன்னின்று நடத்திய தளபதியாக பால்ராஜே இருந்தவர்.

பால்ராஜ் அங்கே நடந்த தாக்குதலையோ, அவருக்கு நெருக்கமாக இருந்த போர்க் தற்கொலைப்போராளியாகப் போனது பற்றியோ எதுவும் பேசவில்லை. அவர் எங்களுக்கு அந்த சமரில் களமாடிய வீரம்மிக்க இலங்கை இராணுவ மேஜர் ஒருவரைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். அந்த மேஜர்தான் அந்த இராணுவ முகாமிற்குப் பொறுப்பாக இருந்தவர்களில் ஒருவர். புலிகள் கிட்டத்தட்ட முகாமைத் தகர்த்து வெல்லும் நிலை வந்துவிட்டது. அந்த இராணுவ மேஜர் உயிரோடு இருந்த மற்றவர்களையெல்லாம் தப்பிப் போகச் சொல்லிவிட்டு, அந்த முகாமைவிட்டு வெளியேறாமல் இறுதிவரை சண்டையிட்டு உயிர் நீத்தவர் என்று சொல்லிக் கொஞ்சம் இடைவெளி விட்டு, 'அவன் ஒரு மரியாதைக்குரிய வீரன்' என்றார். அப்போது நான் பார்த்தது எதிர்த்தரப்பின் வீரத்தை மதிக்கும் ஓர் உயரிய தளபதியின் ஆளுமையை.

4.

மலரவன் போல அன்றைய காலங்களில் பல போராளிகள், படைப்பாளிகளாகவும் பரிணமித்தார்கள். மேஜர் பாரதி, கப்டன் கஸ்தூரி, 2ம்.லெப்.வானதி, பின்னர் மலைமகள் என பெண்களிடையேயும் வீரியமிக்க பல படைப்பாளிகள் தோன்றினார்கள். அவர்களின் பெரும்பாலான படைப்புகள் அன்றைய காலங்களில் தொகுப்புக்களாகியபோதும் இப்போதைய தலைமுறைக்குக் கிடைப்பதில்லை. இந்தப் பெண்களின் சிலர் இயக்கம் படுமோசமாக முதலில் தோற்ற ஆனையிறவு முகாம் ('ஆகாய கடல் வெளி சமர்') தகர்ப்பில் இறந்துபோனவர்கள்.

இன்று சிலர், தாம் ஒன்றிரண்டு வருடங்கள் இயக்கங்களில் இருந்துவிட்டு தம்மைத் தொடர்ந்து முன்னாள் போராளிகளாக முன்வைக்கும் போது, மேலே குறிப்பிட்டப்பட்ட வர்கள் போராளிகளாகவும் படைப்பாளிகளாகவும் இருந்து மரணித்தவர்கள் என்பதை நாம் நினைவில் இருத்தவேண்டும். அவர்கள் மிகுதி அனைவரையும் விட போராளிப் படைப்பாளிகளாக முன்னிலைப்படுத்தப்படவேண்டியவர்கள்.

ஒருவர் தன்னை கடந்தகாலத்தில் போராளியாகவோ அல்லது ஆதரவாளராகவோ முன்வைத்து பொதுவெளியில் பேசினால், அவர்கள் எந்தக்காலத்தில், எப்போது அப்படி இருந்தார்கள் என்பதை தமது நூல்களில் தம்மைப் பற்றிய அறிமுகத்தில் முன்வைக்க வேண்டியது குறைந்தபட்ச அறமாகும். ஏனெனில் அதுவே தமது முழு வாழ்க்கையையே களத்தில் காவுகொடுத்த மலரவன், பாரதி, கஸ்தூரி, வானதி, மலைமகள் என்கின்ற எண்ணற்ற போராளிப் படைப்பாளிகளுக்கு நாம் கொடுக்கக்கூடிய குறைந்தபட்ச மரியாதையாக இருக்கும். ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பூகோள வெப்பமடைதலைத் தடுப்பதில்

# COP 29 காலநிலை மகாநாட்டின் தோல்வி

கலாநிதி. எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

### காபனீரொட்சைட்டின் அதிகரிப்பு

கடந்தகாலத்தில் இடம்பெற்ற காலநிலை மகாநாடுகளில் காபனீரொட்சைட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது பற்றி பல முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் இன்னமும் அது நிறைவேறாமலே உள்ளது. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் மற்றும் மாசுக்களின் அதிகரிப்புக்குக் காரணமான சுவட்டு எரிபொருள் எரிவு பற்றி மனித இனம் இன்றும் அலட்சியமான நிலையிலேயே உள்ளது. 2023 இல் பூகோளத்தை வெப்பப்படுத்தும் மாசுக்கள் உச்சநிலையை அடைந்துள்ளன. இரண்டு தசாப்தங்களில் காபனீரொட்சைட்டின் செறிவு 10% அதிகரித்துள்ளது என உலக வளிமண்டலவியல் நிறுவனத்தின் அறிக்கைகள் கூறுகின்றன. மனித வரலாற்றில் என்றுமில்லாதவாறு காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் மிக விரைவாகத் திரட்சியடைந்து வருகின்றது. கொள்கைத் தீர்மானம் மேற்கொள்வோர் மத்தியில் இது ஓர் அபாய எச்சரிக்கையாக உள்ளது. பாரிய அளவிலான காட்டுத் தீ காபனை உறிஞ்சுவதற்கான மரங்களின் உள்ளார்ந்த திறனில் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகின்றதனால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. 2023 இல் காபனீரொட்சைட்டின் செறிவு 420 p> (தலா மில்லியனுக்கான பகுதிகள்) என்ற நிலையை அடைந்துள்ளது என்பதை விஞ்ஞானிகள் கவலையுடன் அவதானித்துள்ளனர்.

4

மக்கள் பெருமளவில் நிலநெய், நிலக்கரி மற்றும் சுவட்டு வாயுவை எரிக்க ஆரம்பித்த கைத்தொழில் புரட்சிக்காலத்துடன் ஒப்பிடும்போது மாசடைதல் மட்டம் இன்று 51% அதிகமாக உள்ளது. அத்துடன் மாசடைதல் செறிவு மிகவும் உறுதியாகவே உள்ளது. அத்துடன் குறுங்கால மாசாக்கிகள் அதிகரித்துள்ளன. மெதேன் செறிவுகள் 1934 ppb எனக் கைத்தொழிலுக்கு முன்னர் உள்ள மட்டங்களுக்கு மேலாக 165% உயர்வடைந்துள்ளது. நைதரஸ் ஒக்சைட் 336.9 ppb என 25% அதிகரித்துள்ளது. 2 பாகை செல்சியசிற்கு கீழே 1.5 பாகை செல்சியசை இலக்காகக் கொண்டு பூகோள வெப்பமடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான பாரிஸ் உடன்படிக்கையின் இலக்குகளை அடைந்துகொள்வதிலிருந்து நாடுகள் விலகிவிட்டன. இன்று இவை புள்ளிவிபரமாகவே உள்ளன. வெப்பநிலையின் தலா மில்லியனுக்கான ஒவ்வொரு பகுதியும் அதிகரிக்கும்போது கோளத்தினையும் உயிர்களையும் உண்மையிலேயே பாதிப்பதாகவே உள்ளது. வாகனங்களுக்குப் பயன்படுத்தும் பெற்றோல், அனல் மின் நிலையங்களுக்குப் பயன்படும் நிலக்கரி போன்ற சுவட்டு எரிபொருள்களின் எரிவினால் வெளியிடப்படும் வாயுக்கள் சூரிய ஒளியை உறிஞ்சி கோளத்தினை வெப்பப்படுத்துகின்றன.

வளிமண்டலத்தில் காணப்படும் பச்சைவீட்டு வாயுக்களின் செறிவு மனித இனத்தின் முன்னேற்றத்தை மிகத் துல்லியமாக அளவிடும் அம்சமாக இருந்தாலும் வெளியேற்றங்களைக் குறைப்பது தொடர்பாக அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதைத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த நூற்றாண்டு முடிவதற்குள் வெப்பம் 3 பாகை செல்சியஸாக அதிகரிக்கும் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதனை 1.5 பாகை செல்சியஸ் ஆக நிலைநிறுத்துவதற்கு உலகத் தலைவர்கள் உறுதியளித்துள்ளனர். "எமது வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் பதிவு மட்டங்கள் பச்சைவீட்டு வாயுக்களின் தர்க்கரீதியான வெளிப்பாடாக இருந்தாலும் எமது பொருளாதாரங்கள் எமது வளிச் சூழலுக்குள் தொடர்ச்சியாக அமிழ்ந்து போவதைக் காணமுடிகின்றது" என லண்டன் இம்பீரியல் கல்லூரியின் காலநிலை விஞ்ஞானியான ஜோரி றொகல்சி குறிப்பிட்டார். 2015 பாரிஸ் காலநிலை உடன்படிக்கையில் இணங்கிய வெப்பமடைதலின் சகல வரையறைகளையும் பூகோள வெப்பமடைதல் கடந்துவிட்டது என்பதைத் தற்போதைய போக்குகள் காட்டுகின்றன.

அத்துடன் இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் வெளியேற்றங்களைப் பூச்சிய நிலைக்குக் குறைக்க வேண்டுமாக இருந்தால் ஒவ்வொரு வருடமும் 1 ரில்லியன் தொடக்கம் 2 ரில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் பூகோள வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதற்கான மனிதனின் செயற்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் ஆக்டிக் பிரதேச காபன் வெளியேற்றமும் ஞாயிற்றில் ஏற்படும் வெப்ப வெடிப்புக்கள் மற்றும் வெளிவீசப்படும் தீச்சுவாலைகள் ஆகிய இரண்டு பிரச்சினைகளும் உருவாகியுள்ளன.

(தொடரும்)



# அதிர்ஷ்டத்தால் தப்பிய கைதி!



(சென்றவாரத் தொடர்ச்சி)

கே.வி.தவராசா

### அரச சட்டத்தரணி முன்நகர்த்தல் பத்திரம் தாக்கல்

29.02.2012 ஆம் திகதி தெஹிவளைப் பொலிஸ் நிலையப் புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொலைசெய்யப்பட்ட வழக்கின் மேலதிக விளக்கத்துக்காக எதிராளியின் சார்பில் நான் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்த வேளையில் நீதிமன்றத்தினால் மோகனரூபன் எனப் பெயர் கூப்பிடப்பட்ட வேளையில், அரச சட்டத்தரணி தனது விண்ணப்பமொன்றை முன்வைத்தார் . அவ்வேளையில்தான் அரச சட்டத்தரணி நீதிமன்றத்தை வேண்டிக்கொண்ட விண்ணப்பம் யாது என்பது எனக்குத் தெரியவந்தது.

இந்த மனு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தவேளையில் அரச சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தேன். அத்துடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைக்காகக் காத்திருக்கும் இந்த அரசியல்கைதியை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படி அரச சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவைப் பற்றிய எந்தவிதமான அறிவித்தலையோ பாதுகாப்புச் செயலாளாரின் உத்தரவின் பிரதியையோ எதிராளிப் தரப்பு சட்டத்தரணியாகிய எனக்கு வழங்காமல் இந்த முன்நகர்த்தல் பத்திரத்தை அரச சட்டத்தரணி தாக்கல் செய்துள்ளார் என்பதையும் நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன். விளக்கமறியலில் இருந்த மனுதாரரை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிஸார் நீதிமன்ற அனுமதியின்றி முன்னர் விசாரணைக்கெனக் கொண்டுசென்றமை சட்டத்துக்கு முரணானது மட்டுமின்றி இந்தச் செயலானது நீதிமன்றினால் சகித்துக்கொள்ளமுடியாததெனவும் ஏற்கனவே உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமையவே இந்த வழக்கில் எதிராளியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் தியாகராஜா மோகனரூபனை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தமது கட்டுக்காப்பிலிருந்து நீதிமன்றில் ஆஜர்ப்டுத்தி விளக்கமறியல் கட்டுப்பாட்டுக்கு பாரம் கொடுத்தனர். பின்னர் மேல் நீதிமன்றில் குற்றப்பகர்வு தாக்கல் செய்யப்பட்டு விளக்கத்துக்காகப் பல தவணைகள் நீதிமன்றினால் திகதி குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் மீண்டும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுசெல்ல இந்த முன்நகர்த்தல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

### தீர்ப்பை அவமதிக்கும் செயல்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட 10ஆம் இலக்க 1982ஆம் ஆண்டுச் சட்டத்தின் 15ஆம் அ (1) ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் கைதி விளக்கமறியலிருந்து விளக்கத்துக்கு நீதிமன்றம் கொண்டுவரப்படுவதனால் அரச பாதுகாப்புக்கும் பொது அமைதிக்கும் பங்கம் விளையும் சாத்தியங்கள் காணப்படுவதாகக் கருதுமிடத்து விளக்கம் முடியும் வரை கைதியை எங்கு தடுத்துவைக்கப்பட வேண்டும் என்ற முடிவெடுக்க சட்டத்தில் இடமுண்டு. ஆயினும் இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் ஏற்கனவே ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. ஆயினும் பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுக்கு அமைய மீண்டும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குக் கைதியைக் கொண்டுசென்றமை உயர் நீதிமன்றின் தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும் என நீதிமன்றில் நான் வாதிட்டேன்.




### நீதியும் நியாயமுமான விளக்கம்

நீதியும் நியாயமுமான விளக்கம் நடைபெறவேண்டுமாயின், எதிராளி சட்டரீதியான விளக்கமறியலில் இருந்து விளக்க தினத்தன்று நீதிமன்றுக்கு கொண்டுவரப்பட வேண்டும். விசேடமாகக் குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை அறிய உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்படுகின்றது. இந்த விசாரணை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் வேளையில் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருக்கும் அரசியல்கைதியினால் பொலிஸாருக்கு எதிராகச் சாட்சியம் அளிக்க முடியுமா? பொலிஸாரின் கட்டுப்பாட்டிலிருந்து விசாரணைக்கு நீதிமன்றத்துக்குக் கொண்டுவரும் நிலையில் நீதியும் நியாயமும் சுதந்திரமுமான விசாரணையை எதிர்பார்க்க முடியுமா? என நீதிமன்றில் தெரிவித்தேன்.

(வழக்கு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிதியல்ல நீதியே தேவை

○ மயூ

இந்தியாவின், கொல்கத்தாவில் மருத்துவ மனையில் பணியில் இருந்த பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆனால் இந்த வழக்குடன் தொடர்புடைய கொந்தளிப்புக்கள் இன்னமும் அடங்கவில்லை.

### பயிற்சி மருத்துவர் கொலை

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி கொல்கத்தாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் கேட்போர் கூடத்தில் 31 வயதான பெண் பயிற்சி மருத்துவர் சடலமாக மீட்கப்பட்டார். அவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டமை உடற்கூற்றுப் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் மேற்குவங்கத்திலும், இந்தியாவிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, கொல்கத்தாவில் போராட்டங்கள் வெடித்தன. அதன் விளைவாக மேற்குவங்க மாநிலத்தின் சுகாதார சேவைகள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக முடங்கின.

கண்காணிப்புக் கமராப் பதிவுகளின் அடிப்படையில் சஞ்சய் ராய் என்பவர் கைதுசெய்யப்பட்டார். அவர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டு கடந்த 5 மாதங்களாக வழக்கு நடைபெற்றிருந்தநிலையில், அவர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றவாளி சஞ்சய் ராய் சாகும் வரை சிறையில் இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டுள்ள உயர்நீதிமன்றம், உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துக்கு 17 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

### சட்டத் திருத்தம்

இந்தக் கொலைச் சம்பவம் நடந்த ஒரு மாதத்துக்குள் மேற்கு வங்க சட்டமன்றம் அபராஜிதா பெண்கள் மற்றும் குழந்தைகள் (மேற்கு வங்க குற்றவியல் சட்டத் திருத்தம்) சட்டத்தை நிறைவேற்றியது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான இந்திய நீதிச் சட்டம் 2023, இந்திய சிவில் பாதுகாப்புச் சட்டம் 2023 மற்றும் போக்சோ சட்டம் 2012 ஆகியவற்றில் திருத்தம் செய்யும் நோக்கில் இந்த சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

### விசாரணையில் அதிருப்தி

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனது அறிக்கையில், சி.பி.ஐ. இந்த வழக்கை 'அரிதிலும் அரிதானது' எனக் குறிப்பிட்டு, குற்றம் சாட்டப்பட்டவருக்கு மரணதண்டனை விதிக்கவேண்டுமெனக் கோரியிருந்தது. அதேநேரம், இந்த வழக்கில் சம்பவம் நடந்த நேரத்தில் மருத்துவக் கல்லூரியின் முதல்வராக இருந்த சந்தீப் கோஷ் மற்றும் தாலா பகுதி காவல் நிலையப் பொறுப்பாளர் அபிஜித் மண்டல் இருவர் மீதும் சி.பி.ஐ.யால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய இயலவில்லை. அவர்கள் இருவரும் "குற்றம் நடந்த இடத்தில் இருந்த ஆதாரங்களைச் சிதைத்தனர்" என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். தற்போது சந்தீப் கோஷ், உள்ளூர் பொலிஸ் நிலைய அதிகாரியான அபிஜித் மண்டல் ஆகியோர் பிணையில் வெளியே வந்துள்ளனர்.

மறுபுறத்தில் உயிரிழந்த பெண்ணின் பெற்றோர் வழக்கு விசாரணைகளில் அதிருப்தியுடனேயே உள்ளனர். "இந்த விசாரணைகளில் எமக்கு ஏராளமான கேள்விகள் உள்ளன. நிதிக்காக நாங்கள் நீதிமன்றம் செல்லவில்லை. நீதியே எமக்குத் தேவை" என்று உயிரிழந்தவரின் தந்தை தெரிவித்திருக்கின்றார். இந்தச் சம்பவத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்குத் தொடர்பிருக்கின்றது என்று உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினர் நம்புகின்றனர்.

### மேன்முறையீடு

இந்த வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு திருப்திகரமானதாக இல்லை என்று மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியும் கூறியிருக்கின்றார். இந்தியத் தேசிய மகளிர் ஆணைய முன்னாள் தலைவர் ரேகா சர்மாவும் தீர்ப்புத் தொடர்பாக அதிருப்தி வெளியிட்டிருக்கின்றார்.

இந்தத் தீர்ப்பு திருப்தியளிக்காததால் மேற்கு வங்க அரசு கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருக்கின்றது. குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனையாக மரணதண்டனை விதிக்க வேண்டும் என்று மாநில அரசு கோரியிருக்கின்றது. மாநில அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு இந்த வழக்கை விசாரித்த சி.பி.ஐ. கடும் எதிர்ப்பு வெளியிட்டிருக்கிறது. இந்தநிலையில் மாநில அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்பதா, இல்லையா என்று முடிவுசெய்வதற்கு சி.பி.ஐ., குற்றவாளியான சஞ்சய் ராய், பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் ஆகியோரின் பதில்களைக் கேட்டபின்னர் முடிவுசெய்யப்படும் என்று நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது. நீதியைப் பெறுவதில் எல்லா நாடுகளிலும் அலைச்சலும், இழுத்தடிப்புமே தொடர்கின்றன போலும்.



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# என் இனமே...

மிக்க இறந்தகாலத்தைக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களை அடுத்த தலைமுறை மதிப்பது குறைந்துவருகிறது. மூத்த, முன்னோடிகளாய் இருக்கின்ற, அனுபவஸ்தர்களை மதிக்காத ஒரு சமூகம் எப்படி உருப்படும்?

ஊடகங்களுக்குச் செய்திப் பசி. ஆனால் அந்த பசிக்கு தீனியாகக் கிடைத்திருப்பது தேசம். அந்தப் பசிக்கு இரையாகிக்கொண்டிருப்பது தேசத் திரட்சி. ஒருபகுதி ஊடகங்கள் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள உள் முரண்பாடுகளையும் அகமுரண்பாடுகளையும் விடுப்பாக்கி,தமது உழைப்பைப் பெருக்கப் பார்க்கின்றன. கேட்டால் "ஜனநாயகம், நடுநிலைமை, ஊடக தர்மம் " என்றெல்லாம் கூறுகிறார்கள். எல்லா ஊடகங்களுக்கும் தர்மம் இருக்கிறதோ இல்லையோ 'அஜெண்டா' இருக்கும். அது ஒரு உழைப்புக்கான அஜெண்டா. சிலசமயம் அந்த அஜெண்டாவுக்குப் பின் கட்சிகள் இருக்கலாம். கட்சிப் பிரமுகர்கள் இருக்கலாம். வேறு தரப்புகளும் இருக்கலாம். அஜெண்டா இல்லாத ஊடகங்கள் கிடையாது. குறைந்தபட்சம் "வியூவர்"களின் தொகையைக் கூட்டவேண்டும் என்ற அஜெண்டாவாவது இருக்கும்.

ஆனால் இந்த எந்த ஒரு அஜெண்டாவும் தேசத்தைத் திரட்டும் அரசியலுக்கு எதிரானது. தேசத்தை திரட்டவேண்டும் என்று உழைக்கும் ஊடகங்கள் அதை நோக்கித்தான் நேர்காணல்களை எடுக்கும்;கருத்துக்களை உருவாக்கும். யுடியூப்களில் தலைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் இடையே உள்ள இடைவெளிக்குள் ஊடக தர்மம்,தொழில்சார் திறன்கள் எல்லாமே அழிந்துபோகின்றன.

நோபல் பரிசுபெற்ற தென்னாபிரிக்க ஆயர் டெஸ்மண்ட் டுட்டு கூறுவது போல ஒடுக்கும் தரப்புக்கும் ஒடுக்கப்படும் தரப்புக்கும் இடையில் நடுநிலை காப்பது என்பது ஒடுக்குமுறைக்குச் சேவகம் செய்வதே. தேசத் திரட்சியைப் பாதுகாப்பதா?அல்லது டொலர்களுக்காகத் தேசத் திரட்சியைக் குலைப்பதா?

இவ்வாறாக,தேசத் திரட்சிக்கு வழிகாட்டாத ஊடகங்களின் தொகை பெருக்கிக்கொண்டுவரும் ஒரு சமூகம்,மூத்தவர்களை,அனுபவஸ்தர்களை,சமூகப் பெரியார்களை மதியாத ஒரு சமூகம்,தனக்குள் ஏற்படும் பிணக்குகளுக்கெல்லாம் நீதிமன்றத்திற்குப் போகும் ஒரு சமூகம்,தன் கட்சிக்காரருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முறைப்பாடு செய்யும் ஒரு சமூகம்,இனஅழிப்புக்கு எதிராக நீதியைப் பெறுவதற்காக ஒன்றுதிரண்டு போராட முடியுமா?

ஒருபுறம் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை. மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொருபுறம்,சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் கீழ்த்தரமாக விமர்சிக்கப்படுகிறார்கள். அல்லது வழிகாட்டிகளாக முன்னுதாரணமாக நிற்கவேண்டியவர்கள் நீதிமன்றத்திற்கு வழிகாட்டுகிறார்கள். இது இப்படியே போனால் தமிழ்ச் சமூகம் ஒரு தேசமாக நிமிரமுடியுமா?

ஒரு காலம் முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்கவைத்த ஒரு சமூகம்,பண்பாட்டுச் செழிப்பு மிக்க ஒரு நடுத்தர வர்க்கத்தைக் கொண்ட ஒரு சமூகம், இப்பொழுது ஏன் இப்படித் தூர்ந்து போகின்றது? தன்னுடைய பற்களைத் தானே கிண்டி மணக்கும் ஒரு சமூகமாக எப்படி மாறியது ?

தாயகமும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இணைந்து இந்தச் சீரழிவைத் தடுக்க முன்வரவேண்டும். இந்தச் சீரழிவுக்குக் காரணங்கள், போரும் புலப்பெயர்ச்சியும் தலைமைத்துவ வெற்றிடமும் வெளிச்சக்திகளுமே.

சமூகத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து போர் புரிந்தவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். அல்லது காணாமல் ஆக்கப்பட்டுவிட்டார்கள். அல்லது புலம் பெயர்ந்து ஓய்வுபெற்றுவிட்டார்கள். ஒரு சமூகத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து உழைப்பவர்கள்தான் அந்தச் சமூகத்தை ஒரு தேசமாகத் திரட்டலாம். அப்படிப்பட்டவர்களின் தொகை குறைந்துவிட்டது. எல்லாவற்றையும் தொழிலாக எடுத்துக்கொள்பவர்கள்,எல்லாவற்றிலும் இலாபத்தை எதிர்பார்ப்பவர்கள் அதிகரித்துவிட்டார்கள். அதன் விளைவுதான் மேற்கண்ட சீரழிவுகள் அனைத்தும்.

இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது அவர்களை ஒரு சமூகமாக,ஆக்கசக்தி மிக்க ஒரு தேசமாகக் கட்டியெழுப்பும் தலைவர்களும் சமூக உருவாக்கிகளும் கருத்துருவாக்கிகளும் ஊடகவியலாளர்களும் அறிவுஜீவிகளும் கலைஞர்களும்தான். தொழில்நுட்பத்தின் கைதியாகிவிட்ட ஒரு இளைய தலைமுறையை இலட்சியவாதிகளாக மாற்றவல்ல தலைவர்களும் முன்னுதாரணங்களும் வேண்டும். கட்சிகளால்,அமைப்புகளால்,ஊடகங்களால், ஆலயங்களால், திருச்சபைகளால், புலனாய்வுத் துறைகளால்,சிதறடிக்கப்பட்டுவரும் ஒரு சமூகத்தைக் கூட்டிக்கட்டவல்ல, முன்னுதாரணம் மிக்க தியாகிகள் முன்வரவேண்டும்.

தமிழ்மக்கள் ஆஞ்சநேயரைப்போல தமது பலம் எதுவென்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒரே மூச்சில் சமுத்திரத்தைக் கடக்கும் பலம் மிக்க ஒரு சமூகம். அதை அவர்களுக்கு எடுத்துக்கூறவல்ல முன்னுதாரணம்மிக்க ஆளுமைகள் வேண்டும். தன் பலம் எதுவென்று அறியாமல், ஒருவர் மற்றவரை நம்பாமல்,ஏன் தன்னைத்தானே நம்பாமல்,சீரழியும் ஒரு சமூகத்திற்கு வழிகாட்டவல்ல தியாகிகள் முன்வரவேண்டும். தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள ஆளுமைகள் இந்த விடயத்தில் அவசரமாக ஒன்று திரளவேண்டும். முன்னுதாரணங்களை உருவாக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நி.பிருத்திகாசினி,
சிவசக்தி முன்பள்ளி,
தேவிபுரம், 'ஆ' பகுதி
புதுக்குடியிருப்பு



சி.சிவநயா,
தரம் - 2
யா/சுண்டுக்குழி மகளிர்
கல்லூரி



**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



கி.அனுராங்கன்,
தரம் 06
யா/கோண்டாவில்
இராமகிருஸ்ண
மகாவித்தியாலயம்




டா.அனுகெயில்
தரம்: 7A
யா/உடுவில் மகளிர்
கல்லூரி.



ஜெ.அஞ்ஜிதன்
தரம் - 4
யாழ்ப்பாணக்கல்லூரி





ச.சந்தோஷி
தரம்-7D
யா/சாவகச்சேரி இந்து
கல்லூரி



S.அக்சிதா
தரம் - 2
சென்.ஜோன்
பொஸ்கோ



ச. கேதுகன்
தரம்-4A
யா/சாவகச்சேரி மகளிர்
கல்லூரி



அகிலோஜன்
தரம் - 7
யா/ மகாஜன
கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org